Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத ஹு சித்திரை மீ 04ஆம் வ செவ்வாய்க்கிழமை (17 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 20 ஓசை 58

## வடபகுதி ரயில் சேவையால் வருமானம் மீண்டும் அதிகரிப்பு!

(கொழும்பு)

வடபகுதி ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ரயில்வே பகுதிக்கு அதிக வருமானம் கிடைத்து வருவதாக ரயில்வே திணைக்கள வருமானப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

கடந்த மாதம் இருநூற்றிப்பத்து லட்சம் ரூபா வடபகுதி ரயில் சேவைகளால் வருமானமாக கிடைத்துள்ளது.

தற்போது இரவு தபால் ரயில் சேவைகளும், பார்சல்கள் அனுப்பும் வேலைகளும் துரிதமாக நடைபெறுவதாலேயே இந்த வருமானம் கிடைத்துள்ளது.

# பதினேழு கோடி டாலர் செலவு; ஆயிரத்திற்குமேல் வீரர் இழப்பு!

## அமைச்சர் ராஜராமண்ணா விபரிப்பு

(புதுடில்லி)

"இலங்கையில் அமைதி காக்கவென்று சென்ற இந்திய இராணுவத்தின் செலவுக்கு இலங்கை அரசு ஒரு சதமேனும் செலவிடவில்லை. இந்தியப்படைக்காக இந்திய அரசு பதினேழரைக்கோடி ஐம்பது லட்சம் டாலர் பணத்தைச் செலவிட்டிருக்கிறது. இவை தவிர ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரையும் பலி கொடுத்திருக்கிறது என இந்திய பாதுகாப்பு இணைஅமைச்சர் ராஜராமன் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பாகத்தில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்திற்கு முப்பத்தி இரண்டு மாதங்களில் பதினேழு கோடி ஐம்பது லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் இராணுவ வீரருக்கு வழங்கப்பட்ட சம்பளம், அலவன்ஸ், பங்கீட்டுப் பொருட்களின் செலவீடு என்பன எதுவும் அடங்கவில்லை எனவும் ராமண்ணா தெரிவித்தார்.

மேலும் 1987 யூலை மாதத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதிவரையுமே இச் செலவு ஏற்பட்டதாகவும் மார்ச் மாதத்தில் இருபத்தி நான்கு நாட்கள் ஏற்பட்ட செலவு இதில் சேர்க்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை இப்பெரும் செலவீட்டில் ஒரு பகுதியேனும் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் 'அமைதிப்படையினர்' புலிகளுடன் நடத்திய யுத்தத்தில் 1155 பேர் உயிரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் 9 மணிவரை கடை 10.30 வரை பஸ்

(யாழ்ப்பாணம்)

இன்று தொடக்கம் யாழ். நகரப் பகுதியிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் இரவு ஒன்பது மணிவரை திறக்கப்பட வேண்டுமெனவும் இரவு பஸ் சேவை 10 30 மணிவரை நடைபெற வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் வலிகாமம் பொறுப்பாளர் திரு. கிளி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## காணாமல் போனவர் கிணற்றில் மீட்பு

(கரவெட்டி)

வீட்டில் இருந்து படம் பார்க்க என்று கூறி வெளியே சென்ற இளைஞர் ஒருவர் மூன்று நாட்களுக்குப் பின் கிணற்றிலிருந்து பிணமாக மீட்கப்பட்டார்.

கரணவாய்ப் பகுதியில் நிகழ்ந்த இவ் மர்மமரணத்தைத் தழுவிக் கொண்டவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் தொழிற்சாலை புனரமைப்பு

(பரந்தன்)

பரந்தன் இரசாயனத் தொழிற் சாலையைத் திருத்தம் வேலைகளை நேரடியாகக் கவனிப்பதற்கு கூட்டுத் தாபனத் தலைவர் உபாலி டிசில்வா இம் மாதம் பத்தொன்பதாம் தேதி பரந்தன் தொழிற் சாலைக்கு வருகிறார்.

இருபத்தோராம் தேதி தொழிற்சாலையில் நடைபெறும் புத்தாண்டு விழாவிலும் அவர் கலந்து கொள்வார்.

## சேதமடைந்த சிறிய ரயில் நிலையங்கள் மூடப்படும்

(கோண்டாவில்)

அண்மைக்கால வன்முறைகளின்போது நாட்டில் சேதம் அடைந்த சிறிய ரயில் நிலையங்களை மூடிவிட ரயில்வே திணைக்களம் ஆலோசித்து வருகிறது.

இவற்றைத் திருத்துவதற்கு போதியநிதியில்லாததாலுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இதனால் இவற்றில் தற்காலிகமாக ரயில்ப்பெட்டிகள் வைக்கப்படவுள்ளன.

இவற்றைத் திருத்தும் நிதியுதவிகளைக் கொண்டு வருமானம் தரக்கூடிய ரயில்நிலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மாபெரும் எழுச்சி விழா

(வவுனியா)

எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி வியாழக்கிழமை வவுனியா பழைய நகரசபை பகுதியில், மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னைபூபதியின்நினைவாக எழுச்சி தினம் கொண்டாட வவுனியா மாவட்டத்தில் உள்ள சிற்றூர் அவைகள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

இத்தினத்தில், ஊர்வலங்களும், கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

வன்னிப் பிராந்திய விடுத

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை பத்திரிகையாளருக்கு சோவியத் ரஷ்யாவில் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

தேச எழுத்தாளர் பயிற்சி

## இந்தியப்படையினர் கூட அமைதியை ஏற்படுத்தவில்லை

### பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினை தீரலாம் என்கிறார் பிரேமதாசா

(குருநாகல்)

யுத்தத்தினால் எப்போதும் வெற்றி கிடைக்கும் என்று நம்பியிருக்க முடியாது. படைபலம் பொருந்திய நாடான

தவறியதால்தான் எமது சுதந் தானத்தையே விரும்புகின்ற

## யானைக்கு வைத்தது தனக்கே வினையானது!

(வவுனியா)

பயிர்களை அழிக்க வரும் யானைகளுக்கு வைத்த மின்சாரம் தோட்ட உரிமையாளருக்கே எமனானது.

வவுனியா பம்பைமடு கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தோட்ட உரிமையாளரான தர்மலிங்கம் பாலச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடும் மழை டாக்டர் பலி

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று மாலை இடிமின்னலுடன் கூடிய கடும்மழை பெய்ததில் கொட்டாஞ்சேனை பார்பர் வீதியில் புதிய வீடமைப்புத் திட்டத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வீட்டின் ஒரு பகுதி வீழ்ந்ததில் டாக்டர் சுந்தரம்பிள்ளை என்பவர் தமது டிஸ்பென்சரியுடன் நசுங்குண்டு மரணமானார்.

## வடகிழக்கு கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பு

(கல்லாறு)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப் படவுள்ளன.

இதற்கான நிதியுதவியாக முந்நூற்றி இருபது லட்சம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் தொழிற்சாலை புனரமைப்பு

(பரந்தன்)

பரந்தன் இரசாயனத் தொழிற் சாலையைத் திருத்தம் வேலைகளை நேரடியாகக் கவனிப்பதற்கு கூட்டுத் தாபனத் தலைவர் உபாலி டிசில்வா இம் மாதம் பத்தொன்பதாம் தேதி பரந்தன் தொழிற் சாலைக்கு வருகிறார்.

இருபத்தோராம் தேதி தொழிற்சாலையில் நடைபெறும் புத்தாண்டு விழாவிலும் அவர் கலந்து கொள்வார். (37)

## சுகாதார பணிப்பாளரிடம் வேண்டுகோள்

(காத்தான்குடி)

''வறிய மக்கள் நிறைந்து வாழும் காத்தான்குடிப் பிரதேசத்தில் சுகாதார நடவடிக்கைகளை எடுத்துக் காட்டும் திரைப் படங்களைக் காண்பித்து மக்களின் சுகநலம் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும்''

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரிடம் காத்தான்குடி 6ஆம் குறிச்சி ஊர்ப்பணி உத்தியோகத்தர் ஜனாப் ஏ.எல்.எம் இப்ஹாலெப்பை வேண்டுகோள் விடுத்துள்ளார். (55)

## வவுனியாவில் மாபெரும் எழுச்சி விழா

(வவுனியா)

எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி வியாழக்கிழமை வவுனியா பழைய நகரசபை பகுதியில், மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னைபூபதியின்நினைவாக எழுச்சி தினம் கொண்டாட வவுனியா மாவட்டத்தில் உள்ள சிற்றூர் அவைகள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

இத்தினத்தில், ஊர்வலங்களும், கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

வன்னிப் பிராந்திய விடுத

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை பத்திரிகையாளருக்கு சோவியத் ரஷ்யாவில் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

இலங்கையிலிருந்து பத்திரிகையாளர்கள் சிலர் பயிற்சிக்காகக் கடந்த திங்கள் ரஷ்யா பயணமானார்கள். பயிற்சிக்குச் செல்லும் இக்குழுவில் ஒரு தமிழரும், நான்கு சிங்களவர்களும் அடங்குகின்றனர்.

மாஸ்கோவிலுள்ள சர்வதேச எழுத்தாளர் பயிற்சி நிறுவனத்தில் மூன்று மாதப் பயிற்சியை இவர்கள் மேற்கொள்வர்.

இலங்கைப் பத்திரிகையாளர் சங்கமும், சோவியத் நாட்டு பத்திரிகையாளர் சங்கமும் இணைந்து செய்த உடன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சேவ்ரி பஸ் மோதி இளைஞர் மரணம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சேவ்ரி பஸ் மோதியதால் கோப்பாயைச் சேர்ந்த முருகானந்தன் (வயது 22) ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார், இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 8 மணியளவில் மிருசுவிலில் கண்டி றோட்டில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: 49 ஸ்ரீ 46127 இலக்கத் தகடு பொருத்தப்பட்ட லொறியின் சில்லொன்றுக்கு மிருசுவிலில் காற்றுப் போயுள்ளது. லொறியில் பிரயாணம் செய்த முருகானந்தன் லொறிக்குச் சில்லை மாற்றிய பின் பாதை அருகில் நின்றுள்ளார். வேகமாக வந்த சேவ்ரி டஸ் முருகானந்தனை மோதியதுடன் எதிரே வந்த ட்ரக்டரையும் மோதியுள்ளது. ட்ரக்டரில் வந்த நான்கு பேர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரூபா 2 இலட்சம் பெறுமதியான சாறித்திருட்டு பிடிபட்டது

(பண்டத்தரிப்பு)

மார்ச் முற்பகுதியில் பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில ஓடு பிரித்து திருடப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச்சாறிகளில் ஒரு பகுதி வேலணையில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இன்னொரு பகுதி யாழ்நகர் கடைப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டன.

மாதகலைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் இக்களவு தொடர்பான விசாரணைக்காகப் பண்டத்தரிப்பு விடுதலைப் புலிகளின் முகாமில் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் கொடுத்த தகவலை அடுத்து, இன்னொருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோதும் முதலில் பிடிபட்டவரிடம் இருந்தே களவுப் பொருட்கள் மீட்கப்படுகின்றன.

2000/- ரூபா பெற்றுக் கொண்டு, சுமார் 1 இலட்சம் பெறுமதியான யப்பான் சாறிகளை, யாழ்நகரில் கடனுக்கு விற்ற நபர், மீதப்பணம் பெறப் போனபோது கடைக்காரரின் உதவியுடன் பிடிக்கப்பட்டார். (12)

---

குப்பாகத்தில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்திற்கு முப்பத்தி இரண்டு மாதங்களில் பதினேழு கோடி ஐம்பது லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் இராணுவ வீரருக்கு வழங்கப்பட்ட சம்பளம், அலவன்ஸ், பங்கீட்டுப் பொருட்களின் செலவீடு என்ன எதுவும் அடங்கவில்லை எனவும் ராமண்ணா தெரிவித்தார்.

மேலும் 1987 யூலை மாதத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதிவரையுமே இச் செலவு ஏற்பட்டதாகவும் மார்ச் மாதத்தில் இருபத்தி நான்கு நாட்கள் ஏற்பட்ட செலவு இதில் சேர்க்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை இப்பெரும் செலவீட்டில் ஒரு பகுதியேனும் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் 'அமைதிப்படையினர்' புலிகளுடன் நடத்திய யுத்தத்தில் 1155 பேர் உயிரி

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப்படையினர் கூட அமைதியை ஏற்படுத்தவில்லை

## பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினை தீரலாம் என்கிறார் பிரேமதாசா

(குருநாகல்)

யுத்தத்தினால் எப்போதும் வெற்றி கிடைக்கும் என்று நம்பியிருக்க முடியாது. படை பலம் பொருந்திய நாடான இந்தியாவின் இராணுவத்தினரும் வடக்குகிழக்கு பகுதிகளில் அமைதியை நிலைநாட்டத் தவறி விட்டனர்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸகுருநாகலில்இடம் பெற்றபுதுவருட வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி வடக்குகிழக்கு பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்குநாம் தவறியதால்தான் எமது சுதந்திரத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் இந்திய இராணுவத்தினரை இங்கு அழைக்க வேண்டி ஏற்பட்டது.

இந்தியப்படை இங்கிருந்து வெளியேறிய பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் அமைதி நிலவுகிறது. பதினேழு வருடங்களின் பின்னர் வடக்கு கிழக்கில் புது வருடம் கொண்டாடப்பட்டுள்ளது.

பெரும்பாலானமக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். ஆனாலும் ஒருசிலர் தமது குறுகிய நோக்கத்திற்காகக் குழப்பங்களை ஏற்படுத்துகிறார்கள். இது அவர்களின் இயல்பானசெயல்களே. குழப்பங்களை ஏற்படுத்தி அவற்றைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்துவதே அவர்களது எண்ணம். வடக்கு கிழக்கின் பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள், நல்லெண்ணம், கருத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மினிவான் தடம் புரண்டு; இளைஞன் பலி; 12 பேர் காயம்!

(யாழ்ப்பாணம்)

பயணிகளுடன் சென்று கொண்டிருந்த மினிவான் நாவற்குழிக்கருகில் யாழ். மாநகர வரவேற்பு வளைவில் குடைசாய்ந்ததில் இளைஞன் ஒருவன் மரணமானார்; மற்றும் பன்னிரெண்டு பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று கண்டி வீதி வழியாக நாவற்குழி நோக்கி சென்றுகொண்டிருந்த மினிவான் யாழ். மாநகர சபை நிர்வாக எல்லை முடிவடையும் இடத்தில் உள்ள வரவேற்பு வளையத்துக்கருகில் பயணிகளுடன் தடம்புரண்டதில் ஒருவர் பலியானதுடன் பன்னிருவர் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர் பற்றிய விபரம் இன்னும் தெரியவில்லை. இறந்தவர் நீலநிற அரைக்காற்சட்டையும் நீலநிற கோடிட்ட மஞ்சள் சேட்டும் அணிந்திருந்தார். இவருக்கு சுமார் பதினாறு வயதிருக்கலாம் என பொலிசார் தெரிவிக்கின்றனர். (லோ)

---

திட்டத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வீட்டின் ஒரு பகுதி வீழ்ந்ததில் டாக்டர் சுந்தரம்பிள்ளை என்பவர் தமது டிஸ்பென்சரியுடன் நசுங்குண்டு மரணமானார்.

## வடகிழக்கு கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பு

(கல்லாறு)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப் படவுள்ளன.

இதற்கான நிதியுதவியாக முந்நூற்றி இருபது லட்சம் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழான புனரமைப்பு ஒருங்கிணைப்புக் குழு நடப்பு நிதியாண்டில் வழங்க முடிவு செய்துள்ளது.

இந்த நிதியுதவியால் கடந்த காலங்களில் சேதமடைந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## செல்லப்பாவின் எழுச்சிப்பாடல்

(யாழ்ப்பாணம்)

தேனிசை செல்லப்பா குழுவினரின் தமிழீழ எழுச்சிப பாடல்கள் வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை ஐந்து மணிக்கு யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் கலை கலாசாரப் பிரிவு ஒழுங்கு செய்துள்ளது. (லோ

## சுன்னாகம் இலங்கை வங்கி சுயதொழில் முயற்சிக்கு உதவி

(தெல்லிப்பழை)

இலங்கை வங்கி அண்மையில் அறிமுகம் செய்த சுயதொழில் முயற்சிக் கடன்திட்டத்தின் கீழ் பத்துப் பாற்பண்ணையாளர்களுக்கும், புதிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் இருபது சிறு விவசாயிகளுக்கும் உப உணவு பயிர்ச் செய்கைக்கும் புத்தாண்டையொட்டி கடன் வசதிகளை வழங்க இலங்கைவங்கி சுன்னாகம் கிளை முன் வந்துள்ளது

குருப்பசிட்டி சன்மார்க்க சபையின் கண்காணிப்புடன் அப்பகுதியில் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுப் பாதிக்கப்பட்ட பத்துக் குடும்பங்களுக்கு மீண்டும் தமது தொழிலை ஆரம்பிக்க சுயதொழிற்கடன் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐயாயிரம் ரூபா வீதம்

(6ஆம் பக்கம் பார்க்க

# குற்றம்செய்யும்கிராமசேவகர்களை கண்டுபிடிக்க ஒரு குழு நியமனம்

## கலந்துரையாடலில் டொமினிக்

(யாழ்ப்பாணம்)

''கிராம சேவை உத்தியோகஸ்தர்களது திருட்டுக்கள் கண்டுபிடிக்கப் படுமிடத்து அவர்கள்தாமாகப்பதவிவிலகிகொண்டவர்களாகவே கருதப்படுவர் இவர்களின்குற்றத்தை கண்டு பிடிப்பதர்கென்று ஒரு பிரத்தியேககுழு நியமிக்கப்படும்''. என நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ். அரசாங்க அதிபரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலில்விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் கூறினார். அவர் மேலும்சிலயோசனைகளை அங்கு சமுகமளித்திருந்த கிராம சேவையாளர்களுக்கு வழங்கியுள்ளார். அவை வருமாறு:-

ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகஸ்தரும் தாம் சேவை செய்யும்பகுதியிலேயே நிரந்தரமான வதிவிடங்களை கொண்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகஸ்தரும் தாம் சேவை செய்யும்நாட்களையும் நேரத்தையும் தமது அலுவல

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

எவ்வகையான மோட்டார் சைக்கிளாயினும் துரித கெதியில் திருத்திக் கொடுக்கப்படும். Motor Cycle Repair Centre No. 3, Eachchamoddai Road Jaffna. உரிமையாளர்: S, மகேந்திரராஜா (B.758)

### நெசவாளர் தேவை

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ள நெசவாளர் உடன் தேவை நேரில் வரவும் யூனியன் பவுலூம் 190 மகட்டையடி நுணாவில் சாவகச்சேரி. R / 158

### விற்பனைக்கு

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட உழுந்துமா கிலோ ரூ 22 - படி பெற்றுக் கொள்ளலாம். NO. 777 K.K.S Road Jaffna. B/746

## இலட்சார்ச்சனை

(பருத்தித்துறை)

புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தான இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிமுதல் நடைபெறும். நாளை 18ஆம் திகதி சங்காபிஷேகமும், தண்டிகைத் திருவிழாவும் இடம்பெறும். (25)

## ஆண்டுவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்க சனசமூக நிலைய முப்பத்தெட்டாவது ஆண்டுவிழா 18ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

மாலை ஐந்து மணியளவில் நடைபெறும் இவ்வாண்டு விழாவின்போது பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும், (34)

# வவுனியா மாவட்டத்தில் பாடசாலைகள் தரமுயர்வு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள மதியாமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தற்போது விவேகானந்தா வித்தியாலயம்என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது

இதுவரைகாலமும் ஐந்தாம் ஆண்டுவரை வகுப்புகள்நடாத்தப்பட்டு வந்த இப் பாடசாலையில் 9 ஆம் ஆண்டுவரை வகுப்புகள் நடாத்த வவுனியா கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். நவரட்ணராஜா அனுமதிவழங்கியுள்ளார்.

இது இவ்வாறிருக்க வவுனியாகோவில் புதுக்குளம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம் என்று பெயருடன் இருந்த பாடசாலை, கணேசவித்தியாசாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் புதிய பாடசாலைகள் அமைக்கப் பட்டு வருவதும். சிறிய பாடசாலைகளின் தரம் உயர்த்தப் பட்டு , வருவதும் குறிப்பிடத் தக்கது. (தி)

# வறிய மாணவர்களுக்கு றெட்பானா நிவாரண உதவி

(ஏறாவூர்)

றெட்பானா திட்டப்பகுதியால் அண்மையில் ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு சுமார் பதினேழாயிரம் ரூபா. பெறுமதியான சீருடைத்துணிகளும், அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் வெல்லாவெளிப் பகுதியிலுள்ள வெற்றுச்சேனை கிராமத்தில் உள்ள அகதிகளுக்கு கிடுகு, பானை, சட்டிகளையும் சமீபத்தில் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும் இத்திட்டப்பகுதியால் 1985 ஏப்ரல் வன்செயலினால் பாதிக்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்ட ஏறாவூர் பகுதியிலுள்ள கிராமங்களில் சுகாதார தொண்டர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு சுகாதாரம், சிக்கனம், கல்வி வசதி போன்ற அறிவுரைகளை கிராம மக்களுக்கு அறிவுறுத்தி செயல்பட்டு வருவதாக றெட்பானா திட்ட புனர்வாழ்வு உதவியாளர் திரு. கா. புத்திரசிகாமணி ஈழநாதத்திற்கு தெரிவித்தார். (56)

## சங்கானையில் புதுவருடநிகழ்ச்சி

(வட்டுக்கோட்டை)

சங்கானை உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்கான புத்தாண்டு விழா விளையாட்டுப் போட்டிகள் வட்டு இந்துக் கல்லூரி மைதானத்தில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து.வைத்தியலிங்கத்தால்ஆரம்பித்து வைக்கப்பட்டது

வட்டுக்கோட்டை இந்து மாணவிகளின்'' மயில் நடனம்'' நாட்டுக்கூத்து அபிவிருத்தி மன்றத்தின் ''சிவவேடனும் தவவேடனும்'' மற்றும் கலாவினோதன் என்.கே.சின்னமணிகுழுவினரின்''பட்டினத்தார்'' வில்லிசையும் நடைபெற்றது (47)

கரவெட்டி வெல்லன்

# விநாயகர் ஆலயத்துக்கு அருகில் மாட்டெலும்பும், குப்பையும்

(கரவெட்டி)

கரவெட்டி வெல்லன் வினாயகராலய சுற்றுப்புறப் பகுதிகளில் பெரும் தொகையான மாட்டு எலும்புகள் வீசப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதிகளில் நாய்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதோடு சுகாதாரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் புகார் செய்துள்ளனர்.

இவ்வெலும்புகள் எங்கிருந்து எடுத்து வரப்பட்டு இப்பகுதிகளில் வீசப்படுகின்றதென தெரியவில்லையாயினும் இவை நள்ளிரவு வேளைகளிலே வீசப்படுகின்றன எனவும் ஊகிக்கப்படுகின்றது.

எது எப்படி நடந்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் பொது நலன்கருதி இவ்நடவடிக்கையினை உடன் நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேநேரம் நெல்லியடி பட்டின சபையின் சுத்திகரிப்பாளர்களும் இப்பகுதிகளில் சேகரிக்கும் குப்பை கூழங்களையும் ஆலயத்திற்கு அருகாமையில் போட்டு வருகின்றனர். இதனால் ஆலயபக்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (18)


அகிம்சை வேள்வியில் ஆகுதியாகிய

அன்னை பூபதிக்கு

எங்கள் அஞ்சலிகள்



எங்கள் தமிழினத்தின்
இன்னல்களைக் கண்டு
பொங்கி எழுந்தவளே
புது யுகத்தின் நாயகியே
தங்கத் தமிழினத்தின்
தாயகத்தில் தினம்
பங்கம் விளைவித்த
பாதகரின் கொடுமையினை
பாரிற்கு எடுத்துரைத்த
பாசமிகு தமிழ்த் தாயே
அஞ்சலிகள் செலுத்துகிறோம்
அன்னையே ஏற்றிடுவாய்!

மத்தொனி திருவள்ளுவர்
சனசமூக நிலையம், கரவெட்டி

(R/192)


## தெல்லிப்பளையில் தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை ஏப்.13

யாழ். மாவட்ட நிறுவைகள் அளவைகள் திணைக்களம் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள வியாபாரிகளின் அளவை நிறுவைக் கருவிகளுக்கு இம்மாதம் 17ம் திகதிமுதல் முத்திரயிடப் படவுள்ளதாக யாழ். நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பொறுப்அதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 26ம் திகதி வியாழக்கிழமை வரை தெல்லிப்பளை வியாபாரிகள் தங்கள் அளவைக் கருவிகளுக்கு தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணி மனையில் முத்திரையிட்டுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது, (24)

## தடுப்பூசி நடவடிக்கை

தெல்லிப்பழை அரச கால் நடைவைத்திய அதிகாரி பிரிவினர் தற்பொழுது இப்பிரிவில் அடங்கும் சகல கிராமங்கள் தோறும் கோமாரிநோய்க்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொண்டுவருகின்றனர்.

இத்திட்டத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை குரும்பசிட்டிப் பகுதியில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளைக் குரும்பசிட்டி சன்மார்க்கசபை இப்பகுதியில் மேற்கொண்டுள்ளது. (26)


### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறைநாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

110வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)


**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)


## ஒத்திவைப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணத்தில்மேமாதம் முதலாந்திகதி நடைபெற ஏற்பாடாகி இருந்த பனம் பொருட் காட்சி ஒத்திப்போடப்பட்டுள்ளது.

ஜூலை 6ஆம் திகதி இப் பொருட் காட்சித் திறப்பு விழா நடைபெறவுள்ளது.



# அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக

# மாபெரும் உண்ணாவிரதமும்

முப்பத்தெட்டாவது ஆண்டு விழா 18ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும்.
மாலை ஐந்து மணியளவில் நடைபெறும் இவ்வாண்டு விழாவின்போது பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (34)

அதிபர்பிரிவுக்கான புத்தாண்டு விழா விளையாட்டுப் போட்டிகள் வட்டு இந்துக் கல்லூரி மைதானத்தில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து.வைத்தியலிங்கத்தால்ஆரம்பித்து வைக்கப்பட்டது

னம்'' நாட்டுக்கூத்து அரிவிருத்தி மன்றத்தின் ''சிவவேடனும் தவவேடனும்'' மற்றும் கலாவினோதன் என்.கே.சின்னமணிகுழுவினரின்''பட்டினத்தார்'' வில்லிசையும் நடைபெற்றது (47)

பாசமிகு தமிழ்த் தாயே
அஞ்சலிகள் செலுத்துகிறோம்
அன்னையே ஏற்றிடுவாய்!

மத்தொனி திருவள்ளுவர்
சனசமூக நிலையம், கரவெட்டி
(R/192)

இத்திட்டத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை குரும்பசிட்டிப் பகுதியில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளைக் குரும்பசிட்டி சன்மார்க்கசபை இப்பகுதியில் மேற்கொண்டுள்ளது. (26)

யாழ்ப்பாணத்தில்மேமாதம் முதலாந்திகதி நடைபெற ஏற்பாடாகி இருந்த பனம் பொருட் காட்சி ஒத்திப்போடப்பட்டுள்ளது.
ஜூலை 6ஆம் திகதி இப் பொருட் காட்சித் திறப்பு விழா நடைபெறவுள்ளது.



## அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக

# மாபெரும் உண்ணாவிரதமும்
# பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும்
# நடைபெறும்.

**இடம்: புங்குடுதீவு சிவன்கோவில் பின் வீதி**

**காலம்: 17 - 04 - 1990 காலை 8-15 தொடக்கம்**

நோன்பிருத்தல் இங்கொன்றும் புதிதல்ல நம் பெண்கள்
பிள்ளைகளுக்காக கணவர்க்காக தோஷ நிவர்த்தியைவேண்டி
நோன்பிருத்தல் வழமைதான்
ஆயினும் இங்கோர் தாய் நோன்பிருந்து உயிர் துறந்தாள்
தனது குடுப்ப நலனுக்காக என்றில்லாமல்
தமிழீழத்தின் பொது நலனுக்காக
வழமையைவிட இது வித்தியாசமானது
நோற்றிருந்து உயிர் துறந்தாள்
சுவர்க்கம் புகுவதற்காக அல்ல
தமிழீழ மண்ணின் உரிமைநிலை பேறிற்காக
வித்தியாசமான ஒரு தாய்மையை பிரசவித்துக்காட்டி
தன்னுயிரைத் தியாகித்த தாய்
இவள் ஓர் பெருந்தகையாள்.

அமைதியாய் வாய்பிளந்து இம்மண்ணை விழுங்க முயன்றதோர்
அந்நியக் கிரகதோஷத்தினின்றும் நிவர்த்தி காணவும்
மண்ணை அதன் வாயினின்றும் விடுவிக்கப் போராடிய மைந்தர்களை
அதன் நச்சுப் பற்களினின்றும் விடுவிக்கவும்
உண்ணாதிருந்து போராடி தன் உயிரை தியாகித்தாள்
அன்னை பூபதி அவள் ஓர் புனிதை
தமிழ் ஈழத்தின் தாய் அவள்.

மேடைகளிலே பரிசுகாட்டி தேர்தல் வெற்றிகளுக்காக
தேன்தடவிய வார்த்தைகளினால் தித்திப்பை ஊட்டி
ஊரை மயக்கி தமது உறவின் பெருமைக்காய்

தமிழ் உரிமையை விற்ற பெண்களின் நடுவே
அன்னை பூபதி அதே உரிமைக்காக தியாகத் தீயிலே
தன்னை இறக்கினாள் தனது உயிரை தியாகித்தாள்
அன்னை; ஆமாம் அவள் ஓர் புனிதை
தமிழ் ஈழத்தாய் அவளே.

அன்னையைப் போற்றுதும் அன்னையைப் போற்றுதும்
இன்னுயிர் போகினும் தியாகமெனும் எண்ணெயில்
என்றும் சுடரும் இனிய சோதியாய் ஆகினாள் ஆதலால்
அன்னையைப் போற்றுதும்
பெண்மை பேரறத்தின் வடிவமே கண்டதென
வந்தே அருந்தவமே புரிந்துபோயினள் ஆயினும்
எம்தாய் எனநம் பேரின்பினை ஈர்த்ததால்
அன்னையைப் போற்றுதும்! அவள் ஓர் புனிதை!

நோற்றாள் ஓர் அறம்
நொந்த தமிழ்மண் பட்ட
காயகங்கள் எல்லாம் தான்படுமாப்போல்
தியாகத் தீயிலே இறக்கி தன்காயத்தை
வாட்டினாள் வதைத்தாள்
ஈற்றிலே போக்கினாள் உயிரை
போனஉயிர் மீளாது போயினும் அவள்
ஆற்றிய தியாகம் இங்கே
அமைதியைத் தோற்றுவித்து
பூக்கும் ஓர் யுகமே
தியாகச் சுடர் முகப்பொலிவே போலும்.

**கை. சிறிஸ்காந்தன்**
**மீனாம்பிகை ஜவுளி சமுத்திரம், யாழ்ப்பாணம்.**

**புங்குடுதீவு வாழ் மக்களும், புங்குடுதீவு வர்த்தக சங்கமும்**
**புங்குடுதீவு தனியார் போக்குவரத்து சங்கமும்**

(B/780)

# பாகிஸ்தான் மீது ஆப்கான் கடும் குற்றச்சாட்டு

(காபுல்)

ஜம்மு காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆயுதமும் பயிற்சியும் வழங்கி வருவதாய் ஆப்கானிஸ்தான் அரசு பாகிஸ்தான் மீது குற்றஞ் சாட்டியுள்ளது.

அயல் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்றும் ஆப்கானிஸ்தான் அரசு கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் உள்ள இந்திய எதிர்ப்பு தீவிரவாதிகளின் ராணுவ பயிற்சிக்காக பாகிஸ்தான் தன்னுடைய பிரதேசத்தை பயன்படுத்தி வருகின்றது என்றும் நாசவேலை நடவடிக்கைகளை நிறைவேற்றி வைப்பதற்காக அவர்களை இந்திய நாட்டிற்கு அது அனுப்பி வைக்கிறது என்றும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியது.

காஷ்மீரில் பிரிவினை வாதத்திற்கு பாகிஸ்தான் ஊக்கமளித்து வருவதாக காபூலில் ஞாயிற்றுக்கிழமை வெளியான ஆப்கான் வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இத்தகைய பாகிஸ்தானின் மனப் போக்கு ஆப்கானிஸ்தானிற்கும் பாதகமானது என அரச அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அத்துடன் ஆப்கான் அரசுக்கு எதிராக இயங்கும் ஆப்கான் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளித்திருப்பதற்கும் கண்டனம் தெரிவித்தது. அண்மையில் ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற அரச கவிழ்ப்பு சதிக்கும் பாகிஸ்தானே முக்கிய காரணம் என்றும் குறிப்பிட்டது.

இதேவேளைஇந்தியாவோடு இணைந்து விட்ட ஒருங்கிணைந்த ஒரு பகுதியான காஷ்மீரில் தலையிடவே வேண்டாம் என்று பாகிஸ்தான் அரசுக்கு தெளிவான எச்சரிக்கை ஒன்று விடுத்திடுமாறு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரான எல். கே. அத்வானி மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினைகுறித்து பாகிஸ்தானின் தலைவர்கள் வெளியிட்டு வரும் ஆத்திர மூட்டக் கூடிய அறிக்கைகள் பலவும் இந்திய நாட்டுக்கு எதிராய் பாகிஸ்தான் நடத்தும் அறிவிக்கப்படாத போர் நடவடிக்கையாகவே பொருள் படுகிறது என்றும் நிகுப்பிட்டார்.

## கவிதைப் போட்டி

(விசேடநிருபர்)

தமிழ்,சிங்கள புத்தாண்டை முன்னிட்டு உதவி அரசஅதிபர் பிரிவுகளால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு முடிவுகள் பின்வருமாறு:

1-ஆவது இடம்: கவிஞர், வே, ஜயாத்துரை 2-ஆவது இடம்:கவிஞர்,நாக.பரமசாமி 3-ஆவது இடம்: கவிஞர், த. பரமலிங்கம்

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 15-ஆம் திகதி ஞாயிறு மாலை நடைபெற்ற விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன (21)

## நிர்வாக சேவைக்கு பதவி உயர்வு

(பருத்தித்துறை)

இலங்கை புகையிரத திணைக்களத்தில் பணயாற்றும் திரு. செல்லமுத்து ஸ்ரீ நிவாஸன் ஸ்ரீலங்கா நிர்வாக சேவையில் நியமிக்கப் பட்டுள்ளார்.

களனிப் பல்கலைக் கழகக்கலைப் பட்டதாரியான திரு. ஸ்ரீ நிவாஸன் இலண்டன் மாக்கற்றிங் டிப்ளோமா பட்டமும் ஐ. சீ. எம். ஏ. முதலாம் பகுதியில் ''ஏ'' தர சித்தியும் பெற்றவர்

1974 ஆம் ஆண்டு இலங்கைப் புகையிரத திணைக்கள கணக்குப் பகுதியில் நியமனம் பெற்றார்.

இவர் துன்னாலை வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் கவிஞர் செல்லமுத்து, திருமதி கற்பகம் செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரருமாவர். (25)

## இஸ்ரேல் பாலஸ்தீனத்துடன் பேசவேண்டும்.

(வாஷிங்டன்)

இஸ்ரேல் பலத்தீனியருடன் சமாதான பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்கு முன்வர வேண்டும் என்று அமெரிக்க செனட் சபையின் குடியரசுக் கட்சித் தலைவர் றொபட்ரோல் கேட்டுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பலஸ்தீனிய மக்களின் எழுச்சியை அடக்குவதற்காக மேற்கொள்ளப்படும் வன்செயல்களினால் அமெரிக்க மக்கள் மத்தியில்இஸ்ரேலுக்கான ஆதரவு குறைந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

வியட் நாம் யுத்தத்திற்கு எதிராகஅமெரிக்காவின் பொதுசனஅபிப்பிராயம் மாறுவதற்கு வெகுசன தொடர்பு உதவிய வரலாற்றை எடுத்துக் காட்டியஅவர் இதே நிலைமை மத்திய கிழக்கிலும் ஏற்படலாம் என்று கூறினார்.

இவர் மேலும் குறிப்பிடுகையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஐனநாயகம் மீண்டும் துளிர் விட இருப்பதால் இஸ்ரேலுக்கான உதவியை குறைத்து அந்த நாடுகளுக்கு உதவ வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

## புங்குடுதீவில் அன்னைபூபதிக்கு அஞ்சலியும் கூட்டமும்

# அரசியல் கட்சிகள் - நேபாள மன்னர் பேச்சுவார்த்தை தோல்வி

## மன்னர் பதவி துறக்கவேண்டுமாம்

(காட்மண்டு)

நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவில் அரச தரப்பிற்கும் நான்கு உறுப்பினர் கொண்ட நேபாள காங்கிரஸ் பிரதிநிதிக் குழு மற்றும் ஐக்கிய இடதுசாரி முன்னணி கட்சியினருக்கும் இடையே திங்கள் அதிகாலை வரை நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பயனின்றி முறிவடைந்தது.

பதினைந்து மணி நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை நேபாள காங்கிரசும், ஐக்கிய இடதுசாரி முன்னணியும் முன் வைத்த எட்டு அம்சக் கோரிக்கைபற்றி விவாதிக்கப்பட்டது.

இக்கோரிக்கைகள் மன்னர் பிரேந்திராவினாலும், அவர்களது அரச அதிகாரிகளினாலும் ஏற்றுக்கொள்ளப் படாத நிலையில் நேபாள காங்கிரசும் ஐக்கிய இடதுசாரி முன்னணியும் பேச்சுவார்த்தைநடைபெறும் இடத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். தீர்வு ஏதும் காணப்படாததே தாம்பேச்சு வார்த்தையில் இருந்து வெளியேறியதற்கு காரணம் என்று குறப்பிட்டனர்.

இதற்கு முன்னதாக அரசு பதவி துறக்கவேண்டும் என்று பேச்சுவார்த்தை நடந்தஇடத்திற்கு அருகில் ஆயிரக் கணக்கான மக்கள் முற்றுகைப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பிரித்தானியாவில் உள்ளது போல அரசன் அதிகாரமற்ற பதவியுடன் இருக்க வேண்டும் எனவும் நேபாள மக்கள் விரும்புகிறார்கள். பல கட்சி ஆட்சிமுறைமூலம் தேர்தல் நடைபெற்று ஓர் அரசாங்கம் இருக்கவேண்டும் என்றும் கோருகின்றனர்.

## இந்திய அணியில் மீண்டும் சிறிகாந்

(டில்லி)

சார்ஜாவில நடைபெற இருக்கும் ஆஸ்திர-ஏசிய கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் ஆட்டக்காரர்களின் பெயர்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

ரவிசாஸ்திரி, கிருஷ்ண மாச்சாரி சிறிகாந், சஞ்சீவ் சர்மா ஆகியோர் மீண்டும் இந்திய அணியில் சேர்க்கப் படடுள்ளனர்.

இவ் அணியின் கப்டனாக மொகமட் அசாருதீனும், உதவி கப்டனாக கிரனமுரேயும் தெரிந்தெடுக்கபட்டுள்ளனர்.

## லித்வேனியா மீது எரிபொருள் தடை-ரஷ்யா பயமுறுத்தல்

(மொஸ்கோ)

மொஸ்கோ லித்வேனியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வேளையில் லித்வேனியா ஈஸ்ரர் பண்டிகையைக் கொண்டாடியது.

கிறெம்பிளின்விரும்பத்தகாத ஈஸ்ரர் அன்பளிப்பை' அதாவது எரிபொருள், வேறுபல பண்டங்களையும் தடை செய்யப் போவதால் ஏற்படக் கூடிய தாக்கங்களைக் குனறக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சென்ற சனியன்று லித்வேனிய ஜனாதிபதி லயன்ஸ் பேகட் விபினதுலிருந்து தொலைபேசியில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

முதலில் பொருளாதாரத் தடை அடுத்துப் பொருளாதர யுத்தம் என்றார் லயன்ஸ்பேகட்

பொருளாதாரத் தடை தொடர்பான அறிவித்தலுக்கு சென்ற வெள்ளியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் லித்வேனியா பதிலளிக்க வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கொபச்சேவ் அச்சுறுத்தியிருந்தார்.

இந்த அறிவித்தலுக்குக் கைச்சாத்திட்டவர்களுக்கு லித்வேனிய பாராளுமன்றம் ஈஸ்ரர் காலமாதலால் இரண்டு நாட்களுக்கு கூடாது என்பது தெரியும் என்று லயன்பேக்ட்டை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

றோமன் கத்தோலிக்க மாநிலமான லித்வேனியாவில் திங்

நடாத்த அமெரிக்க ஜனாதிபதி புஸ்சுடன் பெர்முடா வந்திருக்கும் அமெரிக்கராஜங்கச் செயலாளர் யேம்ஸ்பேக்கர் கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதாரத் தடை பதற்ற நிலையை அதிகரித்து விடக் கூடுமென்றும், கிறெம்ளின் அதன் அச்சுறுத்தலை நடைமுறைப் படுத்தாது என்று தான் நம்புவதாக சனியன்று தெரிவித்தார்.

பொருளாதாரத் தடையானது மிகவும் இழப்பானதென்றும் சிக்கல்களை நீடிக்க வேண்டாமென்றும் புஸ் வெள்யன்று கூறினார்.

லித்வேனிய ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கான ஈஸ்ரர் செய்தியொன்றில் பாப்பரசர் யோண்போல்' தான் லித்வேனிய மக்களின் அபிலாசைகளுடன் தான் நெருக்கமாக உள்ளதாகத் தெரிவித்தார். பாப்பரசர் யோண்போல் லித்வேனியாவும் பக்கத்து நாடான போலந்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பால்டிக் சபையில் அங்கம் வகிக்கும் லித்வேனியா, லற்ரீவியா எஸ்தோனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேசியவாதிகள் எஸ்தோனியத் தலைநகரில் கூடி லித்வேனியா

## கிடாச்சூரி கிராம பாடசாலையில் ஆசிரியர், தளபாடங்கள் இன்றி மாணவர்கள் பெரும் அவதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிடாச்சூரி என்ற கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையில் தளபாடங்கள், உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். இவற்றில் ஓர்ஆசிரியர் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே இப்பாடசாலைக்கு சமூகம் தருவார்.

மற்ற இருநாட்களும் கல்மடு பாடசாலையில் பணிபுரிகிறார் என்றும், இதனால் படி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பல மைல் தூரம் நடந்தே பாடசாலைக்குப் போய்வருகிறார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள் அமர்வதற்கு ஒழுங்கான கதிரைகள் எதுவுமே இல்லை என்றும், இதுபற்றி வவுனியா கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவுமே இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் பெற்றோர் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர்.

இதேசமயம், மேற்படி பாட

## தமிழீழ ஆய்வு நிர்வாகத்தின் கருத்தரங்கு

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தொடர்க் கருத்தரங்கு நேற்று மாலை 5 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு, கிழக்கு பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான பூர்வாங்க ஆலோசனைகளும் அது தொடர்பான வேறுவிடயங்களும் ஆராயப் பட்டன. இக்கருத்தரங்கில் திட்டமிடல் தொடர்பான வல்லுனர்களும், பல துறைகளைச் சேர்ந்த ஆய்வாளர்களும் கலந்துகொண்டனர்.

## கட்டடம் இடிந்து விழும் அபாயம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ரோமன் கத்தோலிக்க பாடசாலையின் கட்டடம் முற்றாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலுள்ளது.

ஏறக்குறைய இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இந்த பாடசாலையின் அவலநிலை குறித்து மேலிடத்திற்கு பலமுறை அறிவித்தும் இதவரை எவ்வித நடவடிக்கையும் மேற்

பட்டுள்ளார்.

களனிப் பல்கலைக் கழகக் கலைப் பட்டதாரியான திரு. ஸ்ரீ நிவாஸன் இலண்டன் மாக்கற்றிங் டிப்ளோமா பட்டமும் ஐ. சீ. எம். ஏ. முதலாம் பகுதியில் ''ஏ'' தர சித்தியும் பெற்றவர்

1974 ஆம் ஆண்டு இலங்கைப் புகையிரத திணைக்கள கணக்குப் பகுதியில் நியமனம் பெற்றார்.

இவர் துன்னாலை வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் கவிஞர் செல்லமுத்து, திருமதி கற்பகம் செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரருமாவர். (25)

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பலஸ்தீனிய மக்களின் எழுச்சியை அடக்குவதற்காக மேற்கொள்ளப்படும் வன்செயல்களினால் அமெரிக்க மக்கள் மத்தியில் இஸ்ரேலுக்கான ஆதரவு குறைந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

வியட் நாம் யுத்தத்திற்கு எதிராக அமெரிக்காவின் பொதுசனஅபிப்பிராயம் மாறுவதற்கு வெகுசன தொடர்பு உதவிய வரலாற்றை எடுத்துக் காட்டியஅவர் இதே நிலைமை மத்திய கிழக்கிலும் ஏற்படலாம் என்று கூறினார்.

# புங்குடுதீவில் அன்னைபூபதிக்கு அஞ்சலியும் கூட்டமும்

(புங்குடுதீவு)

தியாக அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை நினைவு கூரும் முகமாக கடந்த வியாழன் புங்குடுதீவு கிழக்கு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய முன்றலில் இப்பகுதி மக்கள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட இவ் உண்ணாவிரதத்தை தொடர்ந்து அன்று மாலை மாபெரும் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பானர் திரு. வீ. கஸ்ரோ, தீவக அரசியற் பிரிவைச்சேர்ந்த திரு. நரேஸ் மற்றும் புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்கு கூட்டுறவு சங்க தலைவர் திரு. ப. கனகலிங்கம், ஆசிரியர் திரு. க. திருச்செல்வம், வில்லிசைக் கலைஞர் திரு. தேவகாந்தன் ஆகிய பிரமுகர்கள் அஞ்சலியுரைகள் நிகழ்த்தினார்கள்.

திரு. வே. சு. கருணாகரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (22)

# அக்கரைப்பற்றில் வீதி ஒழுங்கை புலிகள் மேற்பார்வை

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று நகரிலும், நகர் பிரதேச பிரதான வீதிகளிலும், வாகனங்களின் அதிகரித்த நெரிசல்களைச் சீராக்கி, வீதி ஒழுங்கு விதிகளைத் திட்டமிட்ட அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றார்கள்.

இது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அக்கரைப்பற்று அலுவலகப் பொறுப்பாளர் இளங்கோ கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் பூரண அமைதி இருந்து வருவதால், வாகனங்களின் நடமாட்டம் இன்று அதிகரித்து இருக்கின்றது. ஆனால் வாகனங்கள் வீதி ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. இதனால் வீதிகளில் வாகனங்களின் நடமாட்டம் படுமோசமாக இருப்பதால் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

இனிவரும் காலங்களில் இப்பகுதிக்கு வருகின்ற சகல வாகனங்களும் வீதி ஒழுங்கு விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தல் அவசியம். மீறி நடக்கும் சாரதிகள் குற்றப்பணம் கட்டவேண்டி நேரிடும்.

இதேநேரம், பிரயாண வாகனங்கள், தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே நிறுத்தப்படல் வேண்டும். பிரயாணிகளை ஏற்றி இறக்குவதும், உரிய இடங்களிலேயே மேற்கொள்ளல் அவசியம். இவ்வாறு அலுவலகப் பொறுப்பாளர் இளங்கோ கூறினார்.

## சிரமதானம்

(யாழ். விளையாட்டு நிருபர்)

நீர்வேலி விளையாட்டுக் கழக அங்கத்தினர் தமது மைதானத்தை புனரமைப்புச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

புனரமைப்பு வேலைகள் பூர்த்தியானதும் முதற்கட்டமாக கால்பந்தாட்டப் பயிற்சி வகுப்புக்களை யாழ். கால்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்த இருப்பதாக சங்கக்காரியதரிசி கே. எஸ். குணசிங்கம் தெரிவித்தார். (42)

### கிடாச்சூரி கிராம பாடசாலையில்

# ஆசிரியர், தளபாடங்கள் இன்றி மாணவர்கள் பெரும் அவதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிடாச்சூரி என்ற கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையில் தளபாடங்கள், உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். இவற்றில் ஓர்ஆசிரியர் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே இப்பாடசாலைக்கு சமூகம் தருவார்.

மற்ற இருநாட்களும் கல்மடு பாடசாலையில் பணிபுரிகிறார் என்றும், இதனால் இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் பெற்றோர் புகார் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிக்கு பஸ் போக்குவரத்துச் சேவைகள் தொடங்காத காரணத்தினால், மேற்படி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பல மைல் தூரம் நடந்தே பாடசாலைக்குப் போய்வருகிறார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள் அமர்வதற்கு ஒழுங்கான கதிரைகள் எதுவுமே இல்லை என்றும், இதுபற்றி வவுனியா கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவுமே இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் பெற்றோர் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர்.

இதேசமயம், மேற்படி பாடசாலையில் விடுதி கட்டும் வேலைகள் முடிவடைந்து வருகிறது. மல சல கூடமின்றி இப்பாடசாலையில் அவற்றுக்கான கட்டட வேலைகளும் முடிவடைந்து வருகிறதும் குறிப்பிடத்தக்கது. (தி)

# சுவாமி விபுலானந்த அடிகள் பல்துறை சார்ந்த விற்பன்னர்

(கொழும்புத்துறை)

இன்றைய காலகட்டத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் காட்டிய பாதை மிகவும் சிறப்பான பாதை. இசை, இறைபக்தி, இயல், இசை, நாடக வளர்ச்சியில் அவரது ஆற்றலும் சமயப் பணிகளும் புனிதமானவை.

ஈழத்திற்குப் பெருமை தேடித்தந்த முனிவர் பல துறை சார்ந்த விற்பன்னராக விளங்கிய விபுலானந்த அடிகளார் வாழ்வில் ஒரு துறவியாகச் சுவாமி இராமகிருஷ்ணரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்தவர்.

இவ்வாறு பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறைத்தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையில் நடாத்தப்பட்ட சுவாமி விபுலானந்தர் ஜனன தின வைபவத்தில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணிகளினால் அடிகளார் சிறப்புற்றுத் துலங்கினார். பல நாட்டுப் பல்கலைக் கழகங்களும் அடிகளாரின் அறிவாற்றலைப் பாராட்டிப் புகழ்ந்தன. யாழ். நூலை மேடையேற்றி இசைக்கலைக்குப் பெருமை சேர்த்தார். இசைத் தமிழை கர் நாடக, தமிழ் இசை ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தினார்.

இந்து மத அடிப்படைக் கருத்துக்களை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்த பெருமை இவருக்குரியது. ஆன்மீகப் பயன், பண்பாட்டுப் பயன், ஒழுக்கம் மூன்றையும் மக்களிடம் பரவச் செய்தார்.

நல்லை ஆதீன பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

சைவப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் உட்பட பலர் உரையாற்றினார்கள். (24)

## காட்டுத்துறை அம்பாள் ஆலய உற்சவம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள காட்டுத்துறை அருள்மிகு பகவதி மாரியம்பாள் கோயில் அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவ காலங்களில் தினமும் மாலை வேளையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி உள் வீதி உலா வருதலும் இடம் பெறுகின்றன.

இம் மாதம் 21 ஆம் திகதி இறுதி நாள் பகல் அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் இரவு சுவாமி வெளி வீதி உலா வருதலும் நடைபெறும்.

தொலைபேசியில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

முதலில் பொருளாதாரத் தடை அடுத்துப் பொருளாதர யுத்தம் என்றார் லயன்ஸ்பேகட்

பொருளாதாரத் தடை தொடர்பான அறிவித்தலுக்கு சென்ற வெள்ளியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் லித்வேனியா பதிலளிக்க வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கொபச்சேவ் அச்சுறுத்தியிருந்தார்.

இந்த அறிவித்தலுக்குக் கைச்சாத்திட்டவர்களுக்கு லித்வேனிய பாராளுமன்றம் ஈஸ்ரர் காலமாதலால் இரண்டு நாட்களுக்கு கூடாது என்பது தெரியும் என்று லயன்பேக்ட்டை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

றோமன் கத்தோலிக்க மாநிலமான லித்வேனியாவில் திங்கட்கிழமை பொது விடுமுறை நாளாகையால் செவ்வாயன்று மொஸ்கோவுக்குப் பதிலளிப்பதற்கு நகல் அறிக்கை ஒன்றைத் தயாரிக்க முடியாது என்று லயன்ஸ்பேகட் தெரிவித்தார்.

சென்ற மாதம் 11ஆம் திகதி தன்னிச்சையாகச் சுதந்திரப் பிரகடனம் செய்த லித்வேனியல் பாராளுமன்றம் அதை மீளப் பெறாவிடில், பொருளாதாரத் தடையை விதிக்கப் போவதாக மொஸ்கோ அறிவித்திருந்தது.

அமெரிக்காவிடமிருந்து லித்வேனியா பற்றிப் பிரசங்கங்களைக் கேட்கத் தான் தயாராகவில்லை என்று கொபர்சோவ் அமெரிக்க ஜனநாயகக் கட்சி செனற் தலைவர் ஜோர்ஜ். மிற்சல் தலைமையிலான தூதுக்குழுவுக்குச் சொல்லியுள்ளாராம்.

இதேவேளை இங்கிலாந்துப் பிரதமர் மார்கிறட் தட்சருடன் பேச்சு வார்த்தை என்று தான் நம்புவதாக சனியன்று தெரிவித்தார்.

பொருளாதாரத் தடையானது மிகவும் இழப்பானதென்றும் சிக்கல்களை நீடிக்க வேண்டாமென்றும் புஸ் வெள்ளியன்று கூறினார்.

லித்வேனிய ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கான ஈஸ்ரர் செய்தியொன்றில் பாப்பரசர் யோண்போல்' தான் லித்வேனிய மக்களின் அபிலாசைகளுடன் தான் நெருக்கமாக உள்ளதாகத் தெரிவித்தார். பாப்பரசர் யோண்போல் லித்வேனியாவும் பக்கத்து நாடான போலந்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பால்டிக் சபையில் அங்கம் வகிக்கும் லித்வேனியா, லற்ரீவியா எஸ்தோனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேசியவாதிகள் எஸ்தோனியத் தலைநகரில் கூடி லித்வேனியா மீதான சோவியத்தின் நடவடிக்கையைக் கண்டித்துள்ளார்.

# மாணவ பராயத்திலிருந்தே சமயப்பற்று வளரவேண்டும்

(நீர்வேலி)

மாணவ மாணவியரிடையே சமய அறிவையும், சைவ அனுட்டானங்களையும் சிறுவயதிலிருந்தே வளர்க்க வேண்டும், சமயப்பற்று, மக்களிடையே அருகிவரும் இக்காலகட்டத்தில் சமய அறிவை வளர்க்க எல்லோரும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு நீர்வேலி காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபையின் வெள்ளி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் திருமதி மங்கையற்கரசி திரு சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; மதமாற்றங்கள் தலைதூக்கியிருக்கும் இக்காலகட்டத்தில் சமயப்பற்றை மாணவர் மட்டத்திலிருந்தே வளர்க்க வேண்டும். இப்பணியைச் செய்த நீர்வேலி காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபையாரின் இத்தொண்டு பாராட்டத்தக்கது எனவும், இவர்கள் இப்பணிக்குமுன்னோடிகளாகத் திகழ்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.

சபைத் தலைவர் திரு. க. சின்னராசா தலைமையில் நீர்வேலி காமாட்சியம்பாள் தேவஸ்தான முன்றலில் நடைபெற்ற இவ்விழாவில் நீர்வேலிக் கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு. இராசேந்திரக் குருக்கள் மேற்படி விழாவை ஆசிகூறி ஆரம்பித்து வைத்தார்.

வேறு பலரும் உரையாற்றினார்கள்.

வேறுவிடயங்களும் ஆராயப்பட்டன. இக்கருத்தரங்கில் திட்டமிடல் தொடர்பான வல்லுனர்களும், பல துறைகளைச் சேர்ந்த ஆய்வாளர்களும் கலந்துகொண்டனர்.

## கட்டடம் இடிந்து விழும் அபாயம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ரோமன் கத்தோலிக்க பாடசாலையின் கட்டடம் முற்றாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலுள்ளது.

ஏறக்குறைய இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இந்த பாடசாலையின் அவலநிலை குறித்து மேலிடத்திற்கு பலமுறை அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பெற்றோர் புகார் தெரிவிக்கின்றனர். (34)

# இலங்கை வங்கியின் சேவைக்கு முகாமையாளர் பாராட்டு

(சுதுமலை)

இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் அடிப்படை நோக்கங்கள் சிறப்பாக அமைந்ததனாலே இன்று ஐம்பது ஆண்டுகள்நிறைவை சிறப்பாகக் கொண்டாடுகின்ற மக்கள், வங்கிகளை நாடிச் சென்ற காலம் மாறி வங்கிகள் மக்களை நாடிச்செல்கின்றன. இந்தச் சந்தர்ப்பங்களை பொது மக்களாகிய நீங்கள் சரியாகப் பயன்படுத்தினால் நல்ல பலன்களை அனுபவிக்கலாம். சிறுபிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பீர்களேயானால் அவர்கள் வளரவளர அவர்களின் சேமிப்புத் தொகைகளும் வளர்ந்து கொண்டே போகும்,,

புதுவருடப்பிறப்புத் தினத்தன்று வாடிக்கையாளர்களுக்கு நிலையான வைப்புக்களுக்கான பத்திரங்களுடன் கைவிசேஷமாக வெற்றிலையில் ஐந்து ரூபா நாணயத்தையும் கையளித்து உரையாற்றும் போது இலங்கைவங்கி மானிப்பாய் முகாமையாளர் திரு. சீ. என். நவரட்ணராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (19)

## ஆனைக் கோட்டையில் உண்ணாவிரதம்

(சுதுமலை)

அன்னை பூபதி நினைவாக சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் திரு சங்கர் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பலர் கலந்து கொண்டு அன்னை பூபதியின் தியாகத்தைப் பற்றிய சொற் பொழிவுகள் ஆற்றினார்கள் அத்துடன் கவிதைகளும் வாசிக்கப்பட்டன.

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்றலிலும் அண்மையில் திரு. பொ. கனகரத்தினம் தலைமையில் அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதம் அனுஸ்டிக்கப்பட்டது. இதில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். (19

## புங்குடுதீவில் மீண்டும் விளையாட்டுக்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு ஈஸ்ரன் விளையாட்டுக் கழகம் மீண்டும் புத்துயிர்ப்புடன் இயங்க ஆரம்பித்துள்ளது.

தீவுப்பகுதியில் நடைபெற்ற உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் பல வெற்றிக் கேடயங்களைத் தட்டி வந்த இக் கழகம் கடந்த இரண்டு வருடகாலமாக ஏற்பட்டிருந்த குழப்ப நிலைமைகளால் கழக வீரர்கள் இடம் பெயர்ந்து சென்றவுடன் செயற்பாடின்றி கிடந்தது.

தற்போது ஏற்பட்டுள்ள நல்ல சூழ்நிலையை தொடர்ந்து கழக வீரர்கள் மீண்டும் வருகை தந்துள்ளமையினால் இக்கழகம் இயங்க ஆரம்பித்து பல போட்டிகளிலும் பங்கு பற்றி வருகிறது.

## வழிபாட்டுத் தலங்களில் அரசியல் தலையீடு கூடாது

(அக்கரைப்பற்று)

ஆலயங்கள் இறை உணர்வு கட்டுப்பாடு, இந்துக்களின் பாரம்பரிய கலை கலாச்சாரம் ஆகியவைகளைப் பேணும் இறை இல்லங்களாகத் திகழ வேண்டும். மத வழிபாட்டுத் தலங்கள் தனிநபர் அல்லது அரசியல் தலையீடோ இல்லாதுஆலய நிர்வாக குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுதல் அவசியம்

இவ்வாறு அம்பாறை மாவட்டவிடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் காஸ்ரோ அக்கரைப்பற்று பிரதேசத்தில் இந்து ஆலய ஒன்றியத்தைத் அங்குரார்பணம் செய்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் மன்ற இணைப்புச் செயலாளர் திரு. சி. சிவஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காஸ்ரோ பேசுகையில்.

பாடசாலைகள் மத வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றில் அரசியல் தலையீடு எதுவும் இருக்கக் கூடாது. ஆலய நிர்வாகம் சீராகவும் பூசை வழிபாடுகள் ஒழுங்காகவும் நடைபெற வேண்டுமானால் ஆலய பரிபாலன சபையிடம் நம்பிக்கையுடன் நாம் முழுப் பொறுப்புக்களையும் ஒப்படைக்க வேண்டும்

இதே நேரம் பொருளாதார வளமுள்ள ஆலயங்கள் பொருளாதார வளமற்ற ஆலயங்களுக்கு நிதி உதவி செய்ய வேண்டும்.

இன்று அமைக்கப்படுகின்ற இந்து ஆலயங்களின் ஒன்றியம் இம் மாவட்டத்தில் இருக்கின்ற இந்து ஆலயங்களுக்கிடையில் ஏற்படுகின்ற சிறு சிறு தகராறுகளை தீர்ப்பதற்கான அதிகாரம் தமிழீழ விடுதலைப் புலிகளால் இன்று வழங்கப்படுகின்றது இதன் நிர்வாகக் குழுவினர் மிகவும் நேர்மையாகவும் சிறப்பாகவும் கடமையாற்ற வேண்டும் என்றார்.

### முத்தமிழ் நிகழ்ச்சி

(விசேட நிருபர்)

கிறிஸ்து உயிர்ப்பு விழா இயல், இசை, நாடக முத்தமிழ் நிகழ்ச்சி கொழும்புத்துறை- மணிப்புரி கலை அரங்கத்தில் பொது நிலை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது. (21)

வவுனியா மாவட்டத்தில்

## பாதிக்கப்பட்ட இளைஞருக்கு யுனிசெப் நிறுவனம் நிதியுதவி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வன்செயலாலும், மற்றும் வேறு வழியாலும் ஊனமுற்ற இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவிக்கு முகமாக சீதுவ, வத்தேகம போன்ற பகுதிகளில் வானொலி பெட்டிகள் திருத்துதல். இயந்திரங்கள் பழுது பார்த்தல் ஆகிய துறைகளுக்குப் பயிற்சி வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மேற்படி இளைஞர்களுக்கான பயிற்சி முடிவடைந்ததும். அவர்கள் சுயதொழில்களைச் செய்வதற்கு ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயிரம் ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபாவரை இப்பணம் வழங்கப்படும் என்றும் இதற்கான நிதியை யுனிசெவ் நிறுவனம் ஒதுக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)


## வீரத் தாய் பூபதிக்கு எமது அஞ்சலிகள்



அன்னை பூமியும்
அன்னையின் மொழியும்
இன்னலுள் திளைக்க
இன்னுயிர் வாழ்வதோ?

அன்னை பூபதி
ஆர்த் தெழுந்தனள்
இன்னுயிர் ஈந்தொரு
யாகம் முடித்தனள்

அன்னையின் தியாகத்
'தீ'யின் சுடரின்
பின்னே தொடர்வோம்
தாயகம் மீட்போம்.

இயக்கச்சி வாழ் மக்கள்

(R/160)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி சுகன்யா இலிங்கேஸ்வரன்

சங்கரத்தையில் இலிங்கேஸ்வரன் சந்திராவதி தம்பதிகளின் செல்வப்புதல்வி சுகன்யா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (17.4.90) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை (பிரான்ஸ்) அப்பா, அம்மா, அக்கா, அண்ணாமார், சித்திமார், சித்தங்கேணி மாமா குடும்பத்தினர், சிங்கப்பூர் பெரியப்பா, (பிரான்ஸ்) சித்தப்பா குடும்பத்தினர், வவுனியா பெரியப்பா குடும்பத்தினர், சங்கரத்தை பெரியப்பாகுடும்பத்தினர், (இத்தாலி)மாமா, சாவகச்சேரி பெரியப்பா குடும்பத்தினர், கொழும்புத்துறை மாமி குடும்பத்தினர், நவாலி தாத்தா குடும்பத்தினர், நவாலி பொன் அன்ரி, அம்மப்பா குடும்பத்தினர், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (R-189)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



பிரசன்னா

புதுவழி பல கண்டி
புரட்சியின் வழி நடந்து
செந்தமிழ் நாட்டின்
சுதந்திரச் செல்வனாய்
கல்வியில் சிறந்து
செல்வமெலாம் பெற்று வாழ
அன்பாய் வாழ்த்துகிறோம்

குளுகண்டி லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

டடா, அம்மா,
அண்ணா, பிறேம்ஜி
அப்பா, அம்மம்மா,
மாமா நிமால்,
சித்திமார் கலா, செல்வி, நீலா.

(B/777)

தமிழீழத்தின் விடிவிளக்கு

அன்னை பூபதி கணபதிப்பிள்ளைக்கு

## எங்கள் அஞ்சலிகள்



## சிற்றி பார்மசி

மட்டக்களப்பு



## மிட்லண்ட் வீடியோ

கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(குளிரூட்டப்பட்டது)

(R/160)

பெரியப்பாகுடும்பத்தினர், (இத்தாலி)மாமா, சாவகச்சேரி பெரியப்பா குடும்பத்தினர், கொழும்புத்துறை மாமி குடும்பத்தினர், நவாலி தாத்தா குடும்பத்தினர், நவாலி பொன் அன்ரி, அம்மப்பா குடும்பத்தினர், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (R-189)

அரங்கத்தில் பொது நிலை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது. (21)

புதுவழி பல கண்டி
புரட்சியின் வழி நடந்து
செந்தமிழ் நாட்டின்
சுதந்திரச் செல்வனாய்
கல்வியில் சிறந்து
செல்வமெலாம் பெற்று வாழ
அன்பாய் வாழ்த்துகிறோம்

குளுகண்டி லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

டடா, அம்மா,
அண்ணா, பிறேம்ஜி
அப்பா, அம்மம்மா,
மாமா நிமால்,
சித்திமார் கலா, செல்வி, நீலா.

(B/777)

தமிழீழத்தின் விடிவிளக்கு

அன்னை பூபதி கணபதிப்பிள்ளைக்கு

## எங்கள் அஞ்சலிகள்



தங்கத் தமிழ்த் தாயின் விலங்குடைக்கப்
புறப்பட்ட எங்களின் பூபதி அம்மா!
அங்கம் சோர்ந்ததோ அகிம்சைப் போரிலே
ஒன்றல்ல ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
மறந்திடுவோமோ அம்மா!
உன் மாபெரும் தியாகத்தை!

**மாரீசன்கூடல்**
**புனித கயித்தார் கிராமிய**
**கடற்றொழிலாளர் அமைப்பு**

**புனித. கயித்தார் சனசமூக நிலையம்**

(R/188)

## சிற்றி பார்மசி

**மட்டக்களப்பு**



தாயே பூபதி! வானும் வையமும் உரிமை கோர நீ வாழ்ந்து காட்டி விட்டாய். பூதலத்தோர் நீ பூமியில் தெய்வமானவள் என்கின்றார். வானவரோ நீ வானத்துத் தேவதை என்கிறார்களே! நீ வான் பூமியின் தெய்வம் அம்மா தெய்வம். (B/ 779)

## மிட்லண்ட் வீடியோ

கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(குளிருட்டப்பட்டது)

தமிழ், ஆங்கிலம், இந்தி திரைப்படங்களின் தரமான பிரதிகளை உடனுக்குடன் சாவகச்சேரியில் விநியோகிப்பவர்கள்.

அத்துடன்,

தரமான, தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை கனோன் போட்டோஸ்ரட் இயந்திரத்தின் மூலம் செய்து கொடுக்கின்றனர்.

திறக்கும் நேரம்

காலை 8-00 மணி தொடக்கம்
மாலை 8.00 மணி வரை. (B-529)

## O/L பகல் வகுப்பு DAY CLASS

காலை மாலை வகுப்பு

**Typing, ShortHand, Spoken English**

## ஆரம்பம்: 10-4-1990

# BOND

## INSTITUTES, JAFFNA

# O/L

**DECEMBER, 1990, 91..**

முறையான, பாடத்திட்டத்திற்கேற்ற விரிவுரைகள்

இலவச கற்கைப்பொதிகள் [STUDY PACKS]

(B/751)

## அன்னைக்கு எமது அஞ்சலிகள்



**KUGAN STUDIO**

**Kandy Road,**
**Chavakachcheri**

(B-526)

தமிழீழ மண்ணிற் விடிவுக்காய்
தன்னுயிரைத் தான் ஈய்ந்த
அன்னை பூபதியின் திருவடிக்கு
ஆயிரமாம் அஞ்சலிகள்!



**ஜீவா ஸ்ரோர்ஸ்**

**நா. சிவசுப்பிரமணியம்**

பஸ் நிலையம், கொடிகாமம்.

(R/173)

### சிந்தனைக்கு

தர்மமே வெல்லுமெனுஞ் சான்றோர் சொற் பொய்யாமோ
கர்ம விளைவுகள் யாங்கண்டதெல்லாம் போதாதோ

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## ஏன் இந்த பம்மாத்து?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கு சகல கட்சிகளையும் குழுக்களையும் அழைத்துப் பேச வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான பிரேமச்சந்திரன் இலங்கை ஜனாதிபதியைக் கோரியிருக்கிறார்.

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றும் இந்த எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் கேட்டிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காணுமுகமாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சகல குழுக்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்தொன்பது அம்சக் கோரிக்கையைக் கலைஞரிடம் கடைசி நேரத்தில் சமர்ப்பித்தது.

சாத்தியமற்ற யோசனைகள் பல இதிலுள்ளன என்று பிரமிப்படைந்த கலைஞர் இந்த மகஜருடன் பேச்சுவார்த்தை முயற்சிகளை நிறுத்திக் கொண்டார்.

இப்பொழுது இந்தப் பத்தொன்பது அம்சக் கோரிக்கையையும் நிபந்தனையாக வைத்து சகல கட்சிகளையும் குழுக்களையும் அழைத்துப் பேச வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசாவைக் கேட்டிருக்கிறார் பிரேமச்சந்திரன்.

எந்தப் பத்தொன்பது அம்சக் கோரிக்கை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்ததோ அதே பத்தொன்பது அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசுவதற்கு முன் நிபந்தனையாக இப்போது வைக்கப்பட்டிருக்கிறது.

முன் நிபந்தனை எதுவுமில்லாமல்தான் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இந்நிபந்தனைகள் விதித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

# பட் நாயக் எதிர்பார்த்ததை விட
# தமிழ்க்குழுக்களால்தலையிடி அதிகம்

### தேன் நில்வு நாட்கள்

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் கழிக்கும் தேன் நிலவு நீண்ட காலம் நீடிக்காது என்றும், வெகு விரைவில் தராசின் முள்ளு தம்பக்கம் சாயலாம் என்றும், அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகளுக்கு மனமுறிவு ஏற்படும் போது, புலிகள் ஏனைய தமிழ் குழுக்களையும் அழைத்துக் கொள்வார்கள் என்று பெனடிக்ற் நமபுகிறார்.

27 வயதான ரெலோ முன்னணிப் போராளியான மகேஷ்சும் இதே கருத்தைத் தான் தெரிவித்தார். 'எமது போராளிகள் காடுகளில் நிலை கொண்டுள்ளார்கள். ஆயுதப் போராட்டம் மறுபடியும் ஆரம்பமாகும். விடுதலைப் புலிகளின் பலம் நிலையானதல்ல. எமது தலைவர்களின் எதிர்கால நடவடிக்கை தொடர்பாகச் சிந்திக்க இந்திய அரசுடன் ஆலோசிக்க தற்சமயம் டில்லியில் நிற்கிறார்கள்' என்கிறார் மகேஷ்.

ஒரிஸ்ஸா முதலமைச்சர் பட்நாய்க் எதிர்பார்த்ததை விடப் பல பிரச்சனைகள் அதிகளவில் கிளம்பியுள்ளன. இந்திராகாங்கிரஸ்சும், ஜனதா தளத்தில் சிலரும் சேர்ந்து முதலமைச்சர் தமிழ் நாட்டிலும் தெற்கு மாநிலங்களிலும விரும்பத் தகாதவர்கள் என ஒதுக்கிய அகதிகளுக்கு புகலிடம் வழங்கியதற்கு எதிராகப் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். 'அரசாங்கம் அகதிகளை வெளியேற்றா விட்டால் எமது கட்சி அவர்களைத் தூக்கி எறியும்' என்கிறார் இந்திரா காங்கிரஸ் தலைவர் ரகுநாத்பட்நாய்க். ஜனதா தலைவர் பொதுக் காரியதரிசியும், எம்.எல்.ஏயுமான ஹஸ்ரி சந்திர இவ் விவகாரத்தில் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதால் அவரும் கடுகடுப்பான நிலையில் உள்ளார்.

போராளிகளுக்கும் இங்கு அதிகமாக வாழும் பூர்வீகக் குடிகளுக்கிடையிலுமான உறவுகளில் இதுவரை மனஸ்தாபம் ஏற்படவில்லை எனினும், குழப்பத்தை ஏற்படுத்த பலர் முயற்சித்து வருகிறார்கள் உள்ளூர்த் தலைவர்கள். மார்ச் 22ல் மல்கான்கிரியில் 'பந்' ஒன்றை அனுஷ்டித்து, அகதிகள் பிரச்சனையை ஒரு அரசியலில் விவகாரமாக மாற்ற முயற்சிக்கிறார்கள்.

### பாலியல் விவகாரமும் குடிப்பழக்கமும்

போராளிகள் ஏ. கே. 47 போன்ற நவீன ஆயுதங்களை தம் வசம் வைத்திருப்பதாகவும் வதந்திகள் பரவலாக அடிபடுகின்றன. குடிப்பழக்கத்துடன் பாலியல் விவகாரங்களிலும் ஈடுபடுவதாகப் பேசப்படுகின்றது. அகதிகள் முகாமொன்றில் அதிசக்தி வாய்ந்த டிரான்ஸ்மிற்றர் கருவி ஒன்று இருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இதனைத் தொடர்ந்து மார்ச் 20ல் கூடிய பேரவைக் கூட்டத்தில் பல தாக்குதல்களுக்கு பட்நாய்க் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. ஆந்திரா ஒரிஸ்ஸா எல்லைப் புறத்தில் கோராப்புட்டுக்கு அண்மையில் நக்சலைட்ஸ் தீவிரவாதிகளான மக்கள் போராட்டக் குழுவினர்களுக்கு ஆயுதம் வழங்கியதாகவும் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இக் குற்றச் சாட்டுகள் எல்லாம் ஆதாரமற்றது என்று பொலிஸ் அத்தியட்சர் குர்பாச்சல் சிங் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

### பாரிய பிரச்சினை

டிராஸ்மிற்றர் மிகச் சக்தி குறைந்தகருவிஎன்றும் இதைப் பத்திரிகைகள் பெரிது படுத்தி எழுதி விட்டார்கள் என்பது கலக்ரரினதும், பட்நாய்க்கினதும் கருத்தாகும். அகதிகள் நக்ஸ்ஸல்பாரிகளுக்கு உதவுவதற்கான காரண காரியம் எதுவுமில்லை என்கிறார் பட்நாய்க். ஆனால், மல்கான்கிரி சந்தையில் மாத்திரம் அகதிகள் சில சிக்கல்களை உண்டாக்கியுள்ளார்கள். இந்திய செலவாணியைப் பெறுவதற்காக அகதிகள் எலக்ரோனிக் கருவிகளையும் விலைமதிப்புள்ள பண்டங்களையும் விற்று வருகிறார்கள். கிடைத்த பணத்தைக் கொண்டுதமக்குவேண்டியபண்டங்களை வாங்குகிறார்கள். இது உள்ளூர்ப் பொருளாரத்துக்கு உயிரையும், ஊட்டத்தையும் தந்திருக்கிறது என்றாலும், விலைவாசிகளின் ஏற்றம்வறுமையில் வாழும் இப்பகுதி மக்களுக்குச் சில இடஞ்சல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

மல்கான்கிரியிலும், சக்திக் குடாவிலும் அகதிகளைநீண்ட காலம் வைத்திருப்பது அரசாங்கத்தின் முக்கிய பிரச்சினையாகும்.

வந்து சேர்ந்ததும் சேராததுமாக ஏலவே 12 பேர் முகாம்களை விட்டு ஓடிவிட்டார்கள். 4 பேரை விசாகபட்டினத்தில் வைத்துப் பாதுகாப்புப் படையினர் மார்ச் 18ஆம் திகதி பிடித்துள்ளார்கள். என்றாலும் மிகுதிப்பேர் தப்பிவிட்டார்கள். தப்பியவர்கள் சென்னைக்குச் சென்று தங்களது உறவினர்களுடன் வாழ்கிறார்கள் என்று ஈ.என்.டி.எல்.எவ். பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இச் சம்பவம் பட்நாய்க்கைச் சங்கடத்தில் மாட்டியுள்ளது.

இந்திரா காங்கிரசின் எதிர்ப் பிரச்சாரத்தைத் தாங்க முடியாத பட்நாரக் தமிழ் அகதிகள் இன்னும் சிறிது காலம்தான் ஒரிஸாவில் இருப்பார்கள் என்று உறுதியளித்துள்ளார். ஆனால் பட்நாயக்காவின் எதிராளிகள் தமிழ் அகதிகள் ஒரிஸாவை விட்டு வெளியேறப்போகும் நாட்களை எண்ணத் தொடங்கியுள்ளார்கள். ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமிழ் அகதிகளைத் மீளவும் அழைப்பதில் கரிசனையில்லாது இருந்தால் பட்நாய்க் தமிழ் அகதிள் விரைவில் வெளியேறி விடுவார்கள் என்ற 'ஊகத்தோடு' நிலைத்திருப்பது கஷ்டமாகும்.

நன்றி: சண்டே ரைம்ஸ்

> அரசாங்கம் அகதிகளை வெளியேற்றா விட்டால் எமது கட்சி அவர்களைத் தூக்கி எறியும் என்கிறார் இந்திரா காங்கிரஸ் தலைவர் ரகுநாத் பட்நாயக். ஜனதாதளவின் பொதுக் காரியதரிசியும் எம். எல். ஏயுமான ஷரிஸ்சந்திர இவ் விவகாரத்தில் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதனால் அவரும் கடுகடுப்பான நிலையில் உள்ளார்.

## நயினாதீவு படகுச் சேவை

ஆசிரியர்
'ஈழநாதம்'

தற்பொழுது வீதிப்போக்கு

களது தொகை அண்மைக் காலங்களாக அதிகரித்துவருகின்றது. நயினாதீவு நாக

## அன்னை பூபதியின் நினைவாக சர்வோதய நிகழ்ச்சிகள்

(கல்லாறு)

நேற்று முதல் அன்னை பூபதி நினைவஞ்சலிக்காக மூன்று தினங்கள் தொடர்ச்சியாக விரிவான நிகழ்ச்சித்

யாக மாந்தீவு வைத்திய சாலை, மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிஷன், காத்தான் குடி அனாதைகள் இல்லம், உறைணி குருகுலம் ஆகியவற்

## ஊர்சுற்றி

எழுதுவது

இலங்கையின் தலைநகரான கொழும்பிலிருந்து மூன்று தமிழ்த் தினசரிகள் வெளிவருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு, தமிழ்த் தினசரிகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இலங்கை வானொலியில் காலையில் ஆறரை மணிக்குத் தமிழ்ச் செய்தியறிக்கை முடிந்ததும் செய்தித்தாள் கண்ணோட்டம் என்று ஒரு நிகழ்ச்சி கடந்த சில மாதங்களாக இடம் பெற்றுவருகிறது.

இம்மாதம் பதிநான்காம்தேதி கொழும்பில் பத்திரிகை அலுவலகங்களுக்கு விடுமுறை. பதினைந்தாம்தேதி பத்திரிகைசள் வெளிவரவில்லை! இதனால் வானொலியில் செய்தித்தாள்கண்ணோட்ட நிகழ்ச்சியும் இடம் பெறவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்த வெளிவரும் நான்கு பத்திரிகைகளும் தடையின்றி வெளிவந்தன. வழமை போல் இப்பத்திரிகைகள் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்தன.

ஆனால் பதினைந்தாம் தேதி செய்தித்தாள்கண்ணோட்டத்தில் இவை இடம் பெறவில்லை!

★ ★ ★

யாழ் நகரில் பஸ் நிலையத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் வட பிராந்திய போக்கு வரத்துச் சபைத் தலைவர்சம்பிரதாய பூர்வமாக அழைப்பது வழக்கம்.

இந்த விழாவில் கடற்

கோரிக்கையையும் நிபந்தனையாக வைத்து சகல கட்சிகளையும் குழுக்களையும் அழைத்துப் பேச வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசாவைக் கேட்டிருக்கிறார் பிரேமசந்திரன்.

எந்தப் பத்தொன்பது அம்சக் கோரிக்கை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்ததோ அதே பத்தொன்பது அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசுவதற்கு முன் நிபந்தனையாக இப்போது வைக்கப்பட்டிருக்கிறது.

முன் நிபந்தனை எதுவுமில்லாமல்தான் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இந்நிபந்தனைகள் விதித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். தரப்பிலிருந்து எவ்வித பதிலுமில்லை! இந்தக்குழுவின் எம். பிக்கள் தங்கள் தொகுதிகளைத் திரும்பிப் பார்த்ததில்லை; தொகுதி மக்களுடன் தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை. மக்கள் கருத்தையும் இவர்கள் அறிந்து கொள்வதில்லை.

இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இவர்களுக்கு அக்கறையில்லை. பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்பதிலும் இவர்களுக்கு ஆர்வம் இல்லை.

பேச்சுவார்த்தைகளைத் தடுப்பதும் குழப்புவதும்தான் இவர்கள் நோக்கம்; இதற்காகவே தயாரிக்கப்பட்டதுதான் பத்தொன்பது அம்சத்திட்டம்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்பதிலே உண்மையிலேயே இவர்களுக்கு அக்கறை இருந்திருந்தால் இந்தியப் பாதுகாப்புடன் இங்கு வந்தபோதே இந்த முயற்சியை மேற்கொண்டு இருந்திருக்கலாம்; பொதுமக்களுடன் நல்ல முறையில் பழகி அவர்களின் ஆதரவையும் பெற்றிருந்திருக்கலாம்.

ஐக்கிய இலங்கையின் கட்டமைப்புக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரேமச்சந்திரனின் அறிக்கை கூறுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபை, ''ஜனநாயக சோஷலிஸ ஈழக் குடியரசாக'' பிரகடனப்படுத்துவதற்கு ஒரு வருடகால அவகாசம் கொடுத்துத் தீர்மானம் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றிக்கொண்டு அதற்கான அரசியலமைப்பை உருவாக்கும் அரசியல் நிர்ணய சபையாகவும் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இந்நிலையில் ''ஐக்கிய இலங்கை'' என்று எப்படி ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி. சொல்ல முடியும்.

ஈ. பி. ஆர். எல். எவ். மாகாணசபை ''தனி ஈழம்'' பிரகடனம் செய்கிறது. ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி. ஐக்கிய இலங்கை பற்றிப் பேசுகிறார்.

மாகாணசபை அமைச்சர் ஒருவர் மாகாணசபை நிர்ணய சபையாக மாற்றப்பட்டதையே மறந்து மீண்டும் மாகாணசபைக் கூட்டத்தை நடத்துவதற்கு இலங்கை அரசிடம் பாதுகாப்புக் கேட்கிறார்.

ஏன் இந்தப் பம்மாத்து?

ஒரிஸ்ஸா முதலமைச்சர் பட்நாய்க் எதிர்பார்த்ததை விடப் பல பிரச்சனைகள் அதிகளவில் கிளம்பியுள்ளன. இந்திராகாங்கிரஸ்சும், ஜனதா தளத்தில் சிலரும் சேர்ந்து முதலமைச்சர் தமிழ் நாட்டிலும் தெற்கு மாநிலங்களிலும விரும்பத் தகாதவர்கள் என ஒதுக்கிய அகதிகளுக்கு புகலிடம் வழங்கியதற்கு எதிராகப் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். 'அரசாங்கம் அகதிகளை வெளி

போராளிகள் ஏ. கே. 47 போன்ற நவீன ஆயுதங்களை தம் வசம் வைத்திருப்பதாகவும் வதந்திகள் பரவலாக அடிபடுகின்றன. குடிப்பழக்கத்துடன் பாலியல் விவகாரங்களிலும் ஈடுபடுவதாகப் பேசப்படுகின்றது. அகதிகள் முகாமொன்றில் அதிசக்தி வாய்ந்த டிரான்ஸ்மிற்றர் கருவி ஒன்று இருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இதனைத் தொடர்ந்து மார்ச் 20ல் கூடிய பேரவைக் கூட்டத்தில் பல தாக்குதல்களுக்கு

உண்டாக்கியுள்ளார்கள். இந்திய செலவாணியைப் பெறுவதற்காக அகதிகள் எலக்ரோணிக் கருவிகளையும் விலைமதிப்புள்ள பண்டங்களையும் விற்று வருகிறார்கள். கிடைத்த பணத்தைக் கொண்டுதமக்குவேண்டியபண்டங்களை வாங்குகிறார்கள். இது உள்ளூர்ப் பொருளாரத்துக்கு உயிரையும், ஊட்டத்

ங்கியுள்ளார்கள். ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமிழ் அகதிகளைத் மீளவும் அழைப்பதில் கரிசனையில்லாது இருந்தால் பட்நாய்க் தமிழ் அகதிள் விரைவில் வெளியேறி விடுவார்கள் என்ற 'ஊகத்தோடு' நிலைத்திருப்பது கஷ்டமாகும்.

நன்றி: சண்டே. ரைம்ஸ்

இடம் பெறவில்லை!

★ ★ ★

யாழ் நகரில் பஸ் நிலையத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர்சம்பிரதாய பூர்வமாக அழைப்பது வழக்கம்.

இந்த விழாவில் கடற்படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வந்து கலந்து கொண்டார் இது பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

இதுபற்றிக் ஓர் அன்பர் கொடுத்த விளக்கம் இது

இப்பொழுதுள்ள அமைதியான சூழ்நிலையை அரச படையினரும் அரசாங்கமும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களுடன் நல்லுறவும் நட்புறவும் ஏற்படுத்திக் கொண்டு மக்களோடு மக்களாகச் சேர்ந்து மக்களின் போக்கையும் நோக்கையும் திசை திருப்பி விட முயற்சி செய்வார்கள்.

பொதுமக்கள் பொலிஸ் நட்புறவு விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள்என்றெல்லாம் கூட்டாக நடத்துவதில் மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

அன்பரின் இக்கருத்தை உங்கள் காதில் போட்டு விட்டேன்.

# நயினாதீவு படகுச் சேவை

ஆசிரியர்
'ஈழநாதம்'

தற்பொழுது வீதிப்போக்குவரத்து யாழ். மாநகர சபை ஊழியரதும், சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையினரதும் பெருமுயற்சியினால் மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அதே வேளையில் வாகனங்களை ஓட்டுபவர்களுக்கும் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அனைத்து வாகன ஓட்டுனருக்குமான பொதுக் கூட்டம் அண்மையில் கூட்டப்பட்டு, சில வீதி ஒழுங்குகள், வேகக் கட்டுப்பாடு, பிரயாணிகளை ஏற்றுவதில் கட்டுப்பாடுகள் என்பன தற்பொழுது ஓரளவு பேணப்படுகின்றமை கண்கூடு.

தரைமார்க்கப் போக்குவரத்துக்கள் இவ்வாறு இருக்க கடல்மார்க்கமான போக்குவரத்துக்கள் சிறப்பாக தீவுப் பகுதிகளுக்கிடையிலான போக்குவரத்துக்களில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகிறன. மக்களது பிரயாணத்திற்கு போதிய வள்ளங்கள் இன்மை ஒரு வள்ளத்திலே கூடுதலான பிரயாணிகளை வள்ளப்பொறுப்பாளர்கள் பணம் சம்பாதிக்கின்ற ஒரு நோக்கிலே ஏற்றிச்செல்கின்றனர். இதனால்பிரயாணிகள் பல்வேறு சிரமங்களுக்ளாகின்றனர். வள்ளங்களிலே எதுவிதமன கட்டுப்பாடுகளுமின்றி கூடுதலான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதனால் விபத்துக்களுக்குள்ளாக நேரிடுகின்றது.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் குறிக்கட்டுவானிலிருந்து நயினா தீவுக்குச்சென்று கொண்டிருந்த வள்ள மொன்றில் கூடுதலான பயணிகளை ஏற்றிச் சென்றமையினால் விபத்துக்குள்ளாகி, சில பிரயாணிகள் கடலுக்குள் பலியானமை குறிப்பிடத்தக்கது.

தீவுப் பகுதிகளுக்கிடையிலான கடல்மார்க்கப் பிரயாணத்திலே சிறப்பாகநயினா தீவுக்கு வருகின்ற அடியவர்களது தொகை அண்மைக் காலங்களாக அதிகரித்துவருகின்றது. நயினாதீவு நாகபூஷணி அம்பாளுடைய வருடாந்த உற்சவமும் மிக விரைவில் நடைபெறவுள்ளதால், கடல்மார்க்கப் போக்குவரத்து ஒழுங்குகள் பற்றி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நன்கு கவனம் எடுத்து விபத்துக்களை தவிர்ப்பதற்கு முயற்சி எடுப்பார்களா?

—க. மணியம்

நயினாதீவு.

## வாகனங்களின் வேகம்

ஆசிரியர்
'ஈழநாதம்'

அச்சுவேலி, சங்கானை வீதி தொட்டு ஓட்டகப்பலம்வரை சாரதிகள் வாகனங்களைக் குதிரை வேகத்தில் பிடித்து முறுக்குகிறார்கள். இதற்கிடையில் புனித. திரேசா மகளிர் பாடசாலை ஒன்றும் புனித சூசையப்பர் ஆலயமும் உண்டு. மாணவிகள் தமது பாடசாலைகளை விட்டு நடந்து வீடு செல்லாத நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துகின்றார்கள். சிறு பிள்ளைகள் இவர்களின் வேகத்தினால் சிலவேளை மேலே தள்ளப்பட்டும் சாரதிகள் தெரிந்தும் தெரியாதது மாதிரி வாகனங்களைச் செலுத்துகின்றார்கள். இவற்றைக் குறைப்பதற்கு மக்கள் முயற்சிகள் எடுத்தும் பயனளிக்கவில்லை.

இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்தால் எமது எதிர்கால வாழ்விற்கு எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

— என். கிளெமென்ற்

தென்மூலை,
அச்சுவேலி.

# அன்னை பூபதியின் நினைவாக சர்வோதய நிகழ்ச்சிகள்

(கல்லாறு)

நேற்று முதல் அன்னை பூபதி நினைவஞ்சலிக்காக மூன்று தினங்கள் தொடர்ச்சியாக விரிவான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளாதாக மட்டக்களப்பு மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திரு. இ. ஜீவராஜா தெரிவித்தார்.

முதல் நாள் நிகழ்ச்சியாக துறைநீலாவணை தொடக்கம் வாகரை வரையிலான சர்வோதய பன்னிரண்டு பிரதேச நிலையங்களிலும் ஒலிபெருக்கி மூலம் அஞ்சலி கீதங்கள் ஒலி பரப்பப்படும். அதேபோல் அன்னை பூபதியின் படங்கள் வைக்கப்பட்டு முழுமையான அஞ்சலிக்கான அலங்காரங்களும் செய்யப்படும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக மட்டக்களப்பு மாவட்ட கரப்பந்தாட்ட கழகங்கள் கலந்து கொள்ளும் அன்னை பூபதி வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்ட போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வாகரை வைத்தியசாலை 3 ஆம் வாட்டுக்களுக்கு வர்ணம் பூசுதல் துப்பரவு செய்தல் போன்ற சிரமதான நிகழ்ச்சிகள் அத்துடன் வாகரையில் கல்வி நிலையம் ஒன்றை அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் திறந்து வைப்பதுடன் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் இடம் பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக மாந்தீவு வைத்தியசாலை, மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன், காத்தான்குடி அனாதைகள் இல்லம், உறைணி குருகுலம் ஆகியவற்றிற்கு அன்னை நினைவாக அன்னதானம் வழங்கப்படும். அத்துடன் அன்று காலை மட்டக்களப்பு பிரதி பொலிஸ் அத்தியட்சகர் சந்தியில் சர்வோதயத்தால் அமைக்கப்பட்ட அன்னை பூபதியின் நினைவுத் தூபியை விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் சம்பிராதய பூர்வமாக திறந்து வைப்பார்.

அன்று மாலை 6.00 மணி தொடக்கம் மறுநாள் காலை 6.00 மணிவரை கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும். கலை விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் அன்னை பூபதியைப் பற்றியதாகவே அமைக்கப்பட்டுள்ளதாம். இதில் வில்லுப்பாட்டுக்களும் இடம்பெறுமாம்.

18 ஆந் திகதி கலை நிகழ்ச்சிகளிலும் மற்றும் அன்னை பூபதி பற்றிய இதர நிகழ்ச்சிகளிலும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அனைவரும் பங்கு கொள்ள வசதியாக இலவச போக்குவரத்து வசதிகளை தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் செய்து தங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க இருப்பதாகவும் சர்வோதய இணைப்பாளர் தெரிவித்தார்.

(45)

# யாழ் ரயில் நிலையத்தில் புதுவருடத் தன்று பொங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் புதுவருடத் தினத்தன்று பொங்கல் வைபவம் சிறப்பாக நடைபெற்றது

ரயில்வே பகுதியின் வருமானப் பகுதி உயர் அதிகாரி உட்பட பல ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்

இந்த ரயில்வே நிலையம் கட்டப்பட்ட பின்னர் பொங்கல் நிகழ்ச்சி புதுவருடத்தில் நடை பெறுவது இதுவே முதற் தடவையாகும்.

பல்கலைக் கழக மாணவர்களின் உதவியுடன் இந்த பொங்கல் வைபவம் நடை பெற்றது பயணிகளும் கலந்து கொண்டனர்.

## மணி அன்பளிப்பு

(கோண்டாவில்)

வெளி நாட்டிலிருந்து புதிதாக கொண்டுவரப்பட்ட சுமார் நாலரை லட்சம் ரூபாய் பெறுமதியான மணியை பொருத்தும் வேலை சோண்டாவில் சந்தி ஆலயத்தில் நடைபெற்று வருகின்றது.

முழுமையாக வெண்கலத்தால் செய்யப்பட்ட இந்த மணியை வெளிநாடுகளில் வசிக்கும் கோண்டாவில் பிரஜைகள் அன்பளிப்பு செய்துள்ளார்கள். (34)

ஈழநாதம்

# பாகிஸ்தானுடன் நெருக்கடி இதனால் சார்ஜா கிரிக்கெட்டில் பாரதம் சேராது

(டில்லி)

பாகிஸ்த்தானுடன் கெடுபிடி நிலை அதிகரித்து வருவதால் இம்மாதம் நடைபெறவிருக்கும், ஆறுநாடுகளுக்கிடையிலான சார்ஜா கிண்ணத்துக்கான கிறிக்கற் போட்டியில் இந்தியா கலந்து கொள்ளாதென இந்திய அரசு தேசிய கிறிக்கற் அணிக்கு அறிவிக்கவுள்ளது.

பாகிஸ்த்தான், மே. இந்தியத் தீவுகள், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, ஸ்ரீலங்கா, பங்களதேசம் ஆகிய நாடுகள் பங்குகொள்ளும் இந்தக் கிறிக்கற் போட்டியில் பாதுகாப்பு ஒழுங்குகள் காரணமாக இந்திய அணி பங்குகொள்ள முடியாதென இந்தியா கிறிக்கற் கட்டுப்பாட்டுச் சபைக்குத் தெரிவிக்க இருப்பதாகசென்ற வெள்ளியன்று இந்திய அரசாங்கத் தரப்புப் பேச்சாளர் தெரிவித்தார்.

1947 ல் சுதந்திரமடைந்த பிறகு இந்தியாவும், பாகிஸ்த்தானும் மூன்று யுத்தங்களைப் புரிந்துள்ளன. மேற்படி மூன்று யுத்தங்களில் இரண்டு யுத்தங்களுக்கு முன்பு காஷ்மீர் காரணமாயிருந்தது. இன்று மீண்டும் காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஒரு ‘சொல்லாடல் யுத்தம்’ நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஜம்முகாஷ்மீரில் போராடும் போராளிகளுக்கு பாகிஸ்த்தான் ஆயுதமும் பயிற்சியும் வழங்கி வருவதாக பாகிஸ்த்தான் மீது இந்தியா குற்றம் சாட்டி வருகிறது.

இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து காஷ்மீர் பிரச்சினையில் சுமார் 2000 பேர் மரணமடைந்துள்ளார்கள்

## மாற்றப்பட்ட 67 பொலிசாருக்கு பதிலாக எவரும் வரமாட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பெற்ற அறுபத்தேழு பொலிசாருக்குப் பதிலாகப் புதியவர்கள் எவரும், மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படமாட்டார்கள் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடியில் அதே தினம் பொதுமகன் ஒருவர் பொலிசாரால் தாக்கப்பட்டது சம்பந்தமாகவும் விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

மட்டக்களப்பில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனித்து வந்த பொலிசாரும், கச்சேரியில் காவல் நிலையத்தில் பொறுப்பாக இருந்த பொலிசாரும் வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

பொலிசார் கடமையிலில்லாதபோதிலும், வீதி ஒழுங்கு விதிகளைப் பொதுமக்கள் அனுசரித்து நடக்கவேண்டுமென விடுதலைப் புலிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். (37)

## ஆறுமுகத்தான் குடியிருப்பில் பன்றிகள் அட்டகாசம்

(ஏறாவூர்)

ஏறாவூர் பட்டினத்தை அடுத்துள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு, சின்னச்சவுக்கடி போன்ற இடங்களில் ஒருசிலரால் இறைச்சிக்காக வளர்க்கப்பட்ட பன்றிகள் தற்போது சுமார் ஒருவருடகாலமாக எவ்வித பாதுகாப்புமின்றி கவனிப்பாரற்ற நிலையில் கட்டாக்காலிகளாக விடப்பட்டுள்ளன.

இவை நாளாந்தம் இரவு நேரங்களில் மீராடகேணி, ஐயன்கேணி, தளவாய், தாமரைக்கேணி போன்ற கிராமங்களில் பிரவேசித்து அக் கிராமவாசிகளால் நடப்பட்டுள்ள உப உணவுப் பயிர்களை அழித்துநாசப்படுத்துகின்றன.

பாதுகாப்பற்ற நிலையில் உள்ளவர்களின் வீடுகளுள் புகுந்து அவர்களின் உயிர்களுக்கு தீங்கு ஏற்படக்கூடிய நிலையையும் உருவாக்கியுள்ளது. அத்துடன்;

தற்போது அப்பகுதிகளில் பூத்துக் காயாக இருக்கும் மரமுந்திரிகையின் மரக்கிளைகளையும் முறித்துச் சேதப்படுத்துகின்றது.

மேலும் முஸ்லிம் மக்களால் இஸ்லாம் மதத்தில் விலக்கப்பட்டுள்ள பிராணிகளில் ஒன்றான இதை எவ்வழியிலும் தடைசெய்ய முடியாத நிலையை உணர்ந்து மீராடகேணி கிராமவாசிகளில்பலர்சேர்ந்து ஏறாவூர் செயலக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் ஜனாப் எம். ஐ. சரீபிடம் பன்றிகளின் ஆபத்திலிருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (56)

### காணாமல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியைச் சேர்ந்த கே. தங்கராசா (வயது 27) என்பவராவர்.

உறவினர்கள் தேடி மூன்று நாட்களின் பின் அப்பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து பிணமாக மீட்கப்பட்டார். (18)

### யானைக்கு ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரன் (25) என்பவர் தோட்ட வரம்பில் நடந்து போகும் போது தவறிவிழவே மின்சாரக் கம்பிகளைப் பிடித்ததால் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

இவரது அபயக்குரல் கேட்டு ஓடிவந்து இவரைக் காப்பாற்ற இவரைப் பிடித்த மனைவியும் மின்சாரம் தாக்குண்டு வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டின் அடிப்படையிலேயே இப்பயிற்சி வழங்கப்படுகின்றது.

இதே மாதிரியான ஏற்பாட்டில் 1988 ஆம் ஆண்டிலும் ஏழு பத்திரிகையாளர், இலங்கையின் முதற் குழுவாக அங்கு சென்று பயிற்சிபெற்று வந்தனர்.

எஸ். என். பிள்ளை (வீரகேசரி), சரத் பெரேரா. தர்மரத்தின விஜயசுந்தரா, சமின்திர பெணான்டோ, லெனின் அமரவிக்கிரமா ஆகியோரே இவ்வாறு சென்றுள்ளனர். (12)

### சேவ்ரி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயங்களுக்கு உள்ளானார்கள். முருகானந்தனும் ஸ்தலத்திலேயே பலியானார். சேவ்ரி பஸ் வேலியில் மோதிய படி நிற்கக் காணப்பட்டது. சம்பவம் நடந்ததும் பஸ் சாரதி தலைமறைவாகி விட்டார்.

ஸ்தலத்துக்கு விரைந்த விடுதலைப் புலிகள் காயப்பட்டவர்களுக்கு உடனுதவி வழங்கி மருத்துவமனைக்கு எடுத்துச்

### வவுனியாவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப்புலிகள் மக்கள்முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன், வவுனியா விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

சுமார் ஒரு வருடகாலமாக இராணுவத்தினதும் பொலீஸாரினதும் கூடாரமாக இருந்து வந்த வவுனியா பழைய

## பயிலுனர் ஆசிரியருக்கு வாழ்க்கைச் செலவுப்படி!

(கொழும்பு)

பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற 25,000 பேர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக்கான படி வழங்கும்படி அகில இலங்கை அரசினர் ஆங்கில ஆசிரியர் சங்கம், கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்குச் சமர்ப்பித்த மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

25,000 பயிலுனர் ஆசிரியர்களுக்குத் தலா ரூபா 1000/- படியாக வழங்கப்படுகிறது இது வாழ்க்கை வாழ்வதற்கே போதாது. வாழ்க்கைச் செலவுப் புள்ளி இந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து 964·2 ஆக அதிகரித்துள்ளது.

பயிலுனர் ஆசிரியர் சமூக நியமங்களுக்கேற்ப வாழ வேண்டும் என்றும், அவர்களுக்கும் கடப்பாடுகள்உண்டு என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அத்துலத் முதலிக்கு மேற்படி ஆசிரியர் சங்கம் சமர்ப்பித்த மற்றொரு அறிக்கையில், இரண்டாவது மொழி ஆண்டு I முதல் பள்

### மந்திரிக்கு மகஜர்

ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட வேண்டும் என்றும், இரண்டாவது மொழியை இளமையில் கற்பிப்பதால், முதல் மொழி வளர்ச்சியுறாது என்றும், பிள்ளையின் அறிவு வளர்ச்சி பின்னடைந்து விடும் என்றும் பொதுவாக நம்பப்படுவது தவறானதென்று மேற்படி சங்கத்தின் தலைவர் எ. ஏ. பெரேரா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## டேபிள் டெனிஸ் பயிற்சி முகாம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் டேபிள் டெனிஸ் பயிற்சி முகாம் ஒன்றை நாளை தொடக்கம் 25 ஆம் திகதி வரை மேற்படி கழக மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இப் பயிற்சிகள் தினமும் காலை 9 00 மணி தொடக்கம் 12 மணி வரையும் நடைபெறும்.

இப் பயிற்சி முகாமுக்கு, விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். பிரதம பயிற்றுனராக திரு.பீ. சிவபாதசுந்தரம் அவர்கள் பணியாற்றுவார்.

## பீகாரில் 100க்கு மேற்பட்ட புகையிரத பயணிகள் மரணம்

(பட்னா)

பீகாரின் தலைநகரான பட்னாவுக்கு மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் புகையிரதத்தில் தீப்பிடித்ததால் 100 பேருக்குமேல் இறந்து விட்டதாகத் தெரியவருகின்றது.

மிக நெரிசலாக மக்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெட்டியில் காஸ் சிலிண்டர் வெடித்ததால் இவ் விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது. இதுவரை 100க்கு மேற்பட்ட சடலங்கள் வெளியில் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்தைக் கேள்விப்பட்டதும் மத்திய ரயில்வே அமைச்சர் பட்னா விரைந்துள்ளார். அதேவேளை மாநில முதலமைச்சர் விசாரணைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சராசரியாக வருடாந்தம் இந்தியாவில் 500க்கு மேற்பட்ட புகையிரத விபத்துக்கள் நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானிய தூதரக அதிகாரி கலாசார அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள ஈரானிய தூதரகப் பொறுப்பதிகாரி ஏ. ஆர். பாராஜீராய் நேற் ... ஏ. ஆர். பாராஜீ ராய் விசேடமாக எடுத்துக் கூறினார்.

கிழக்குப் பிராந்தியத்தில்

## தமிழரின் பண்பாடு சகல இன, மத மக்களுடன் சேர்ந்து வாழ்வது

(விசேட நிருபர்)

‘‘கடந்த சில ஆண்டுகளுக்குப் பின்பாக இன்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் தமிழ், சிங்களப் புத்தாண்டு தினத்தை சகல இனத் தேசிய மக்களும் தேசிய விளையாட்டுகள், சுதேச கலாசார வைபவங்கள் மூலமாககொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.’’

கடந்த 15 ஆம் திகதி மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவால் நடத்தப்பட்ட தமிழ் சிங்கள புத்தாண்டு விழா வைபவத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்து பேசுகையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்டவாறு கூறினார்.

வைபவம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்துசமய, கிறிஸ்தவ, முஸ்லிம் பெரியார்கள் மேடையில்

களில் பிரவேசித்து அக் கிராம வாசிகளால் நடப்பட்டுள்ள உப உணவுப் பயிர்களை அழித்துநாசப்படுத்துகின்றன.

பாதுகாப்பற்ற நிலையில் உள்ளவர்களின் வீடுகளுள் புகுந்து அவர்களின் உயிர்

## சேவ்ரி- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயங்களுக்கு உள்ளானார்கள். முருகானந்தனும் ஸ்தலத்திலேயே பலியானார். சேவ்ரி பஸ் வேலியில் மோதியபடி நிற்கக் காணப்பட்டது. சம்பவம் நடந்ததும் பஸ் சாரதி தலைமறைவாகி விட்டார்.

ஸ்தலத்துக்கு விரைந்த விடுதலைப் புலிகள் காயப்பட்டவர்களுக்கு உடனுதவி வழங்கி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். மரணமான முருகானந்தனின் வீட்டுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

## குற்றம் - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கத்தின் முன்பு மக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

கடமை நேரத்தில் எந்த உத்தியோகஸ்தரும் மது போதையில் இருத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமங்களிலும் நிவாரணம் வழங்கப்படும் பொழுது குறைந்தது பத்துப் பேர் கொண்ட ஒருகுழு மேற்பார்வைக்காக வைத்துக் கொண்டே சிபாரிசு செய்யப்படல் வேண்டும்.

இறந்தவர்களின்மரணசான்றிதழ்களை உடனடியாக வழங்க கிராமசேவை உத்தியோகத்தர்கள் நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

பொதுமக்கள் கிராமசேவை உத்தியோகத்தர்களின் ஊழல்களைக் கண்டு தெரிவித்தால் உடனடியாக கிராமசேவையாளர்மீது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடவடிக்கை எடுக்கப்படும். கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் மக்களுக்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் இல்லை என்ற முறைப்பாடுகள் இனிமேல் மக்களுக்கு தெரிவிக்ககூடாது. அதற்குரிய நடவடிக்கைகளை முன்கூட்டியே அவர்கள் மேற்கொண்டிருக்க வேண்டும். (லோ)

## சேதமடைந்த . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யங்களைத் திருத்தவும், விஸ்தரிக்கவும் உலகவங்கி ஆலோசனை தெரிவித்திருப்பதாகவும் ரயில்வேபகுதி உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (34)

ஏறாவூர் செயலக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் ஜனாப் எம். ஐ. சரீபிடம் பன்றிகளின் ஆபத்திலிருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (56)

## வவுனியாவில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
லைப்புலிகள் மக்கள்முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன், வவுனியா விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

சுமார் ஒரு வருடகாலமாக இராணுவத்தினதும் பொலீஸாரினதும் கூடாரமாக இருந்து வந்த வவுனியா பழைய நகரசபை அரங்கம் இந்த எழுச்சி தினத்தில் மக்களால் பயன்படுத்தப்படவுள்ளது.

மாபெரும் விழாவாக நடைபெறும் இந்த தினத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பதினேழு . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ழந்ததாகவும், ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவித்தார். அதேவேளை ஏறத்தாள 3000 பேர் படுகாயம் அடைந்தனர் என உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் வெளிநாடுகளில் பணியாற்றச் சென்ற 'இந்திய அமைதிப் படையினரில்' இதுவரை இவ்வளவு பெருந்தொகையில் வீரர்கள் இறந்ததில்லை எனவும் தெரிவித்தார்.

## இந்திய - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றுமை ஆகியவற்றின் மூலம் படிப்படியாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன.

வறுமையை ஒழிக்கநாம்பாடுபட வேண்டும். வறுமையே இன்று நமது பொது விரோதி என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## கூட்டுறவுச்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)
கூட்டுறவுச் சங்க கட்டடங்கள், வாகனங்கள், தளபாடங்கள் என்பன திருத்தியமைக்கப்படவுள்ளன.

இவ்வாறாக சேதமடைந்த கூட்டுறவு சங்கங்களின் விபரங்கள் விரைவில் சேகரிக்கப்படவுள்ளன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மதிக்கப்பட்டுள்ளார்.

## இலங்கை . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாட்டின் அடிப்படையிலேயே இப்பயிற்சி வழங்கப்படுகின்றது.

இதே மாதிரியான ஏற்பாட்டில் 1988 ஆம் ஆண்டிலும் ஏழு பத்திரிகையாளர், இலங்கையின் முதற் குழுவாக அங்கு சென்று பயிற்சிபெற்று வந்தனர்.

எஸ். என். பிள்ளை (வீரகேசரி), சரத் பெரேரா. தர்மரத்தின விஜயசுந்தரா, சமின்திர பெணான்டோ, லெனின் அமரவிக்கிரமா ஆகியோரே இவ்வாறு சென்றுள்ளனர். (12)

# புகையிரத பயணிகள் மரணம்

(பட்னா)
பீகாரின் தலைநகரான பட்னாவுக்கு மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் புகையிரதத்தில் தீப்பிடித்ததால் 100 பேருக்குமேல் இறந்து விட்டதாகத் தெரியவருகின்றது.

மிக நெரிசலாக மக்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெட்டியில் காஸ் சிலிண்டர் வெடித்ததால் இவ் விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது. இதுவரை 100க்கு மேற்பட்ட சடலங்கள் வெளியில் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்தைக் கேள்விப்பட்டதும் மத்திய ரயில்வே அமைச்சர் பட்னா விரைந்துள்ளார். அதேவேளை மாநில முதலமைச்சர் விசாரணைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சராசரியாக வருடாந்தம் இந்தியாவில் 500க்கு மேற்பட்ட புகையிரத விபத்துக்கள் நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# நாலாயிரத்தித் தொளாயிரம் கலன் டீசல் கசிவு

(கொழும்பு)
தெமட்டைக் கொடையிலுள்ள ரயில்வே எரிபொருள் பாய்ச்சும் நிலையத்தில் நாலாயிரத்து தொளாயிரம் கலன் டீசல் ஒழுகியிருக்கின்றது. இதன் பெறுமதி இரண்டு லட்சம் ரூபாவுக்கும் அதிகமானதென்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் பற்றி தகவல்கள் கிடைத்ததும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சர் திரு. விஜயபாலா மென்டிஸ் தெமட்டைக் கொடையிலுள்ள ரயில்வே நிலையத்திற்குச் சென்று விசாரணைகளை நடாத்து மாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அங்குள்ள எரிபொருள் பாய்ச்சும் நிலையத்தில் பத்தாயிரம் கலன் கொள்ளக் கூடிய தாங்கி ஒன்றிலிருந்து ரயில் இஞ்சின்களுக்கு டீசல் பாய்ச்சுவதற்குகாக குறிக்கப்பட்ட குழாய்களில் இந்த ஒழுக்கு ஏற்பட்டிருக்கின்றது. பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின்னர், அங்கிருந்த மூன்று காவலாளிகளையும் எரிபொருள் நிரப்பும் ஊழியர் ஒருவரையும் வேலையிலிருந்து இடை நிறுத்துவதற்கான உத்தரவையும் பிறப்பித்தார். நாசகார வேலைகள் காரணமாக இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என நம்பப் படுகின்றது.

## சுன்னாகம் - . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )
ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இடைக்காடு சனசமூக நிலையத்தின் மேற்பார்வையில் புதிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் எதிர்வரும் சிறுபோக வெண்காயச் செய்கைக்கு இருபது சிறு விவசாயிகளுக்கு தலா இரண்டாயிரத்திஐநூறு ரூபா வீதம் ஐம்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டங்கள் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலும் பலருக்கு இக்கடன் வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (26)

# ஈரானிய தூதரக அதிகாரி கலாசார அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)
இலங்கையிலுள்ள ஈரானிய தூதரகப் பொறுப்பதிகாரி ஏ. ஆர். பாராஜீராய் நேற்றுப் புதிய முஸ்லீம் கலாசார இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் அல்சூரை, அவரது அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போது, இலங்கையில் முஸ்லீம்களின் தற்போதைய நிலைமை பற்றியும்' இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடிவிடுவதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா எடுத்த தீர்மானம் பற்றியும், இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு ஈரானிய அரசாங்கம் தயாராகவுள்ளது பற்றியும் திரு. ஏ. ஆர். பாராஜீராய் விசேடமாக எடுத்துக் கூறினார்.

கிழக்குப் பிராந்தியத்தில் இரயில் பாதையை, மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை விஸ்தரிப்பதற்கான யோசனையைப் பற்றியும் ஜனாப். அல்சூர் குறிப்பிட்டார். இந்த விவகாரங்களை சாதகமான முறையில்பரிசீலிப்பதற்காக, ஈரானிய அதிகாரிகளின் கவனத்திற்குத் தான் சமர்ப்பிக்கப் போவதாக ஈரானியத் தூதரகப் பொறுப்பதிகாரி உறுதியளித்தார்.

கடந்த வாரத்தில் ஈரானிய அரசாங்கம், தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காகவும், புனித ரம்ழான் மாதத்தின்போது பேரீச்சம்பழங்களை அன்பளிப்பாக வழங்கியமைக்காகவும் ஜனாப் அல்சூர் ஈரானிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக் கழக பரீட்சைத் திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக் கழகத்தில் 19- 04- 90 இல்நடைபெறவிருந்த கலை வர்த்தக தொழில் நிர்வாகப் பரீட்சைகள் 20- 04- 90 க்கும் 19- 04- 90 ல் நடைபெறவிருந்த 2- ஆம் வருட விஞ்ஞான பீடப் பரீட்சை 05- 05 90 க்கும் பின்போடப்பட்டுள்ளது.

இதே வேளை 30 04 90 ல் நடைபெறவிருந்த இராமநாதன் நுன்கலைக் கல்லூரிப் பரீட்சை 14 05 90 க்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இத்தகவல்களை பரீட்சைப் பகுதியைச் சேர்ந்த திருமதி மங்கையற்கரசி தெரிவித்தார்.

# யப்பானில் உலகச் சிறுவர் ஓவியக் கண்காட்சிப் போட்டி

(பண்டத்தரிப்பு)
உலக சிறுவர் ஓவியக் கண்காட்சி 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யப்பான் நாட்டில் நடாத்தபடவுள்ளது.

உலகின் பல பாகங்களிலும் இருந்து பெறப்படும் 4 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களின் ஆக்கங்கள் கண்காட்சியில் வைக்கப்படும். ஓவியத்திற்கான கருப்பொருள் பங்கு கொள்வோரின் சுயதெரிவிற்க்கு விடப்பட்டுள்ளது.

இதில் முதல் பரிசு பெறுபவர் இலவசமாக தாம் விரும்பிய ஒரு முதியவரும் யப்பான் நாட்டை சென்று சுற்றிப்பார்த்து வரவசதிகள் செய்து கொடுக்கப்படும்,

எட்டு தங்க, வெள்ளி பரிசுகளும், 1200 சான்றிதழ்களும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஓவியக்காட்சிக்கான படங்கள் யப்பான் நாட்டில் இந்த ஓவியங்கள் காட்சிக்கு பொறுப்பான குழுவிடம் 1990 செப்ரம்பர் மாதம் 30 ந் திகதிக்கு பிந்தாமல் சென்றடைய வேண்டும்.

# தமிழரின் பண்பாடு சகல இன, மத மக்களுடன் சேர்ந்து வாழ்வது

(விசேட நிருபர்)
''கடந்த சில ஆண்டுகளுக்குப் பின்பாக இன்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் தமிழ், சிங்களப் புத்தாண்டு தினத்தை சகல இனத் தேசிய மக்களும் தேசிய விளையாட்டுகள், சுதேச கலாசார வைபவங்கள் மூலமாககொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.''

கடந்த 15 ஆம் திகதி மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவால் நடத்தப்பட்ட தமிழ் சிங்கள புத்தாண்டு விழா வைபவத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்து பேசுகையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்டவாறு கூறினார்.

வைபவம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்துசமய, கிறிஸ்தவ, முஸ்லிம் பெரியார்கள் மேடையில் வீற்றிருந்து ஆசியுரைகள்வழங்கினர்.

முறையே நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள் வண பிதா ஏ.சகாயநாதன் அடிகள் அல்ஹாஜ் மௌலவி எம்.எம். நாகிப் ஆகியோர் ஆசியுரை கூறினர்.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்தொடர்ந்து பேசுகையில்''எமது அன்றாட வாழ்க்கையில் மற்றவர்களுக்குப் பணி செய்வதென்பதுமுக்கியமான ஒன்று என்றார்.

தலைமையுரையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் ''சுதந்திரமடைந்த 39, ஆண்டுகளின் பின்னர் இவ்வாறான புத்தாண்டு விழாவைக் கொண்டாட முடிந்துள்ளது, எமது கலைகலாசாரம் மட்டில்லாமல் எமது உரிமைகளையும் வென்றெடுக்கும் சூழல் தோன்றியிருப்பது மகிழ்ச்சி பயப்பதாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்களான எமது பண்பாட்டுக் கோலம் சகல இன, மத மக்களுடனும் சேர்ந்து ஒற்றுமையுடன் வாழ்ந்த வரலாற்றை உடையது'' என்றார்.

சிறப்பு விருந்தினர்களாக, யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், கோட்டக்கல்வி அதிகாரி தியாகராசா, இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி திவ்வியசிரோன்மணி நாகராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில்களை வழங்கினார்.

செல்வி யசோதா நடராசா நன்றி கூறினார்.

## சிறுவர்களை உற்சாகப்படுத்த சிறுவர் பூங்கா

(வண்ணார்பண்ணை)
இலங்கை இந்திய இராணுவ நடவடிக்கையினால் பிஞ்சு உள்ளங்களின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ள இவ் வேளையில் அவர்களை உற்சாகப்படுத்தி நல்வழிக்கு இட்டுச் செல்வது பொதுஸ்தாபனங்களின் கடமையாகும். இவ்வாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினார். கிராமசங்கத்தலைவர் க. இந்திரலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கிராமசேவையாளர் த. இரத்தினேஸ்வரன் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் பொ. கனகசபாபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (44)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

காசுடன் மணிப்பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.